For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஜீன் 2024 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • விலை : ரூ 60 • இதழ் 49

## ஒரு பெரும் தரிசனத்தின் சிறு வரலாறு



வது ஆண்டில் ...




Engage, Enrich & Empower Christian knowledge

www.christianhistoricalsociety.in

# பதிப்பாசிரியரிடமிருந்து..




## கர்த்தருடைய அதிசயமான நடத்துதல்

'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்'. உபா 32; 7

கர்த்தருடையகிருபையால்நான்குவருடத்தைக்(48சுவடுகள்) கடந்து ஐந்தாம் வருஷத்துக்குட்படுக்கின்றோம். வரலாற்றுச் சங்கத்திற்க்கும், சுவடுகளுக்கும் கர்த்தர் இந்த வருடங்களில் அநேக விதமாய் நம் ஊழியங்களை ஆசீர்வதித்திருக்கின்றார். பெறுதற்கரிய ஆசிர்வாதம் பெற்றிருக்கின்றோம்.

நமது சங்கத்திற்காகவும், சுவடுகள் மாத இதழுக்காகவும் ஜெபித்து, உழைத்து ஆதரித்து வருகின்ற யாவருக்கும் நன்றி கூறுகிறோம். நமது முதன்மைப்பணிகளில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் & டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை அளவுகடந்த விதத்தில் ஆசீர்வதித்திருக்கின்றார்.

கட்டுரை ஆசிரியர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள், சங்க உறுப்பினர்கள், கமிட்டி உறுப்பினர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், ஜெபிக்கின்றவர்கள், கொடுக்கின்றவர்கள் அனைத்து வகையிலும் உதவி செய்கின்றவர்கள் என அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆறு மாதங்களாக சரியான நேரத்தில் பிரிண்ட் செய்து இதழ்களை கொடுக்க முடியவில்லை வருந்துகின்றோம். சந்தா வகைக்கு 2.5 லட்சம் வரை நமக்கு குறைவு ஏற்பட்டது. கர்த்தர் தாமே குறைவுகளை நிறைவாக நமது கரங்களை ஸ்திரப்படுத்தி நம்மைத் திடப்படுத்துவாராக. கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கிதற்குச் சரியாய் அவரது திவ்ய ஊழியத்தை நடத்திவருவோமாக..

நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் ஊழியத்தில் வாஞ்சை கொண்டிருக்கின்ற ஒவ்வொரு அங்கத்தினரும் இன்னுமொரு சந்தாதாரர்களை சேர்க்க முயற்சிக்கும்படியாய் அன்பாய் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு முக்கியமான ஊழியம். வரலாற்றை நேசிக்கும் அக்கறை நமக்குள்ளது போல மற்றவர்களுக்கும் கொண்டு செல்ல நாம் ஏகோபித்து இந்த ஊழியத்தை நடத்துவோமாக.

நமது சங்கத்தை பற்றியும் நமது சுவடுகள் ஊழியத்தைப் பற்றியும் எழுதி அனுப்புங்கள் அது மற்றவர்களுக்கும் எங்களுக்கும் புதிய செயல்களை செய்யவும், புதிய தலைமுறைகளுக்கு புதிய விதமாய் கொண்டு செல்லவும் வழிவகுக்கும். நம்மோடு இன்னும் புதிய அங்கத்தினர்கள் சேரும்போது இன்னும் நல்ல பலனைக் காண்போம்.

புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாரபரனின் பணியில்

manna selvakumar

சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்

Contact Us

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,




# ஒரு பெரும் தரிசனத்தின் சிறு வரலாறு



அருள்திரு.V.சாமுவேல் ஆபிரகாம்
பெங்களூர்

தனது வரலாற்றின் ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் தரிசனப் பொறுப்பாளர்களாகிய தன்னார்வத் தலைவர்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள்!

## காலமும் சூழலும் வேதாகம அடிப்படையும்

அமைதியும் ஸ்திரத்தன்மையும் தெளிவும் அற்ற, பல்வேறு குழப்பங்கள் நிறைந்த (VUCA – Volatile, Uncertain, Complex and Ambiguous) ஒரு உலகத்திலே வாழ்கிற நாம், இதன் உள்ளூர் வெளிப்பாடுகளையும் (manifestations), நம் சபைகளிலே இதன் தாக்கத்தையும் (ramifications) அதிகமாகவே உணர்கிறோம். இது ஒரு கடினமான காலம்!

இத்தகைய சூழல்கள் வேதாகம வரலாற்றின் சமுதாயங்களில் வந்தபோதெல்லாம் அவர்கள் தங்கள் வேர்களையும், தாங்கள் கடந்து வந்த பாதைகளையும் நினைவுகூர்ந்து, புதிய பெலன் மற்றும் உத்வேகத்துடன் முன்னேறியுள்ளார்கள். அவர்களது வரலாறுகள் சங்கீதங்களாகவும் பாடப்பட்டன. நம் வேதாகமமே அவ்வப்போது தேவ வழிநடத்துதலின்படி பதிவுசெய்யப்பட்ட ஒரு வரலாறுதான்!

ஒரு உதாரணம் - தங்கள் பாவத்தின் காரணமாக சிதறடிக்கப்பட்டு, அதன் பின்விளைவுகளை அனுபவிக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட தேவஜனத்தின் மத்தியிலே வாழும் மெய் விசுவாசிகளுக்கு ஆண்டவரின் அறைகூவல் என்ன? (ஏசாயா 51:1-7) உங்கள் வரலாற்றைத் திரும்பிப்பாருங்கள் - ஆரம்பகால அற்புதங்களை நினைவுகூருங்கள், ஆறுதல் அடையுங்கள், வரப்போகும் மாற்றத்தை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

நம் ஆதி அன்பை அறியவும், நாம் இன்ன நிலையிலிருந்து விழுந்தோம் என்பதைப் புரிந்து மனந்திரும்பவும் நம் சபை வரலாறு உதவக்கூடும் (வெளி 2:1-7). பல முக்கிய விஷயங்கள் தீர்க்கதரிசனத்தின் மூலமாக மட்டுமல்ல, வரலாற்றின் மூலமாகவும் வெளிப்படுகின்றன, தெளிவாகின்றன.

## ஒரு வரலாற்று இடைவெளி

(ஆனால்) இன்றைய நம் சிக்கல் என்னவென்றால் - எங்கே நம் வரலாறு? நம் உள்ளூர்ச் சபைகளின் வரலாறு.

வேதாகம வரலாறு மற்றும் பொதுவான உலக வரலாற்றை ஓரளவு அறிந்துள்ள நாம், அன்று மிஷனெரிகள் எழுதிவைத்துப்போன அவர்களுக்கு பயனுடையதாயிருந்த பண்டைய மற்றும் மேலை நாட்டு வரலாறுகளையே ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக நம் விசுவாசத்துக்கு ஆதாரமாகவும் உதாரணங்களாகவும் பயன்படுத்துகிறோம்.

இந்தியாவிலே தோமா முதல் நூற்றாண்டிலேயே சபைகளை நிறுவியிருந்தாலும், சீர்த்திருத்த சபைகள் வளர்ந்து, பல நூறு ஆண்டுகளைக் கடந்து, பல உலகளாவிய சபைத்தலைவர்களை எழுப்பியிருந்தாலும், நம் விசுவாசத்தின் உள்ளூர் மயமாக்கல் இன்னும் முழுமையாகவில்லை.

விசுவாசம் என்றாலே ஜார்ஜ் முல்லர், தரிசனம் என்றாலே ஹட்ஸன் டெய்லர், மிஷனெரிப் பணி என்றாலே டேவிட் லிவிங்ஸ்டன், தியாகம் என்றாலே வில்லியம் கேரி, சேவை என்றாலே அன்னைத் தெரசா. . . இப்படிப் பல! நம் ஓய்வுநாள் பாடங்களும், விடுமுறை வேதாகமப் பள்ளியின் வரலாறுகளும் இத்தகைய வெளிநாட்டு வீர வரலாறுகளாலேயே

நிறைந்துள்ளன.

இவை நம் உலகளாவிய கிறிஸ்தவ சபையைப் புரிந்துகொள்ள உதவுமென்றாலும், கிறிஸ்தவத்தை நம் சமுதாயங்களை விட்டு அந்நியப்படுத்த முயலும் அஞ்ஞானிகளின் வாதங்களுக்கும் துணைபோகிறது என்பதும் உண்மை. நம் சபைகளும் மிஷனெரிப் பணிகளும் இத்தகைய இடைக்கால வரலாறுகளால் நிறைந்திருந்தாலும், அவை முறையாக எழுதப்படவில்லை என்பதும், நம் சபைவரலாற்றுக் கல்வியின் அங்கங்களாகி வெகுஜன பயன்பாட்டிற்கு வரவில்லை என்பதும் நாம் யோசிக்கவேண்டிய விஷயங்கள்.

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

இத்தகைய சூழலிலேதான் நம் சபைகளை நிறுவிய மிஷனெரி ஊழியங்களின் வரலாற்று விபரங்களுடன், நம் சபைகளின் ஆதி விசுவாசிகள் மற்றும் நம் சபைகளின் இடைக்கால வளர்ச்சியின் வரலாறுகளையும் தோண்டியெடுத்து, அவற்றைப் பதிவுசெய்து பத்திரப்படுத்துவதுடன், ஆர்வமுள்ள வாசகர்களுக்கு கொடுக்கும் தன்னார்வ ஊழியத்தை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் முன்னெடுத்தது. அத்துடன் ஆங்காங்கு கருத்தரங்குகளை நடத்தி, அந்தந்த சபைகள் இதே பணியை அவர்களின் பகுதியிலே செய்வதற்கு பல்வேறு விதங்களில் வழிகாட்டிவரும் இவர்களது பணிகள் மிகவும் பாராட்டுக்குரியவைகள்.

## வளர்ச்சியும் தாக்கமும்

## இதன் வளர்ச்சி ஒரு தரிசனத்தின் வளர்ச்சியே!

மேல் திருநெல்வேலியின் இரு இளம் விசுவாசிகளுக்கு ஆண்டவர் கொடுத்த வாஞ்சை, என்ன செய்யவேண்டும் என்னும் தெளிவு, இப்பணியின் ஆரம்பம், இதற்காய் தங்கள் எல்லாத் திறமைகளையும் ஆசீர்வாதங்களையும் பயன்படுத்தும் இவர்களது அர்ப்பணம், இதன் வளர்ச்சி, பல்வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு முறைகளிலே இவர்களை தியாகத்துடன் உற்சாகப்படுத்துவோர், மற்றும் இப்பணியின் மாபெரும் பல்முனைத் தாக்கம்! இதுவே ஒரு வியத்தகும் வரலாறு!

இதன் விளைவாய் சபை வரலாறுகள் பல்வேறு தளங்களில் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளன. இந்த தரிசனம் பலரையும் அவரவர்கள் பகுதியிலே செயல்பட வைத்துள்ளது. சமகால சபை வரலாற்றை விவாதிக்கும் பல குழுக்கள் எழும்பியுள்ளன. குறிப்பாக, மறைந்து கிடந்த பல முக்கிய வரலாறுகள் வெளியே வந்துள்ளன. பல எழுத்தாளர்களும் படைப்பாளர்களும் எழும்புகிறார்கள். நம் சபைகளின் வரலாறு நம் வாழ்வின் அங்கமாகிறது - நம்மைப் பாரப்படுத்துகிறது, ஜெபிக்கவைக்கிறது, ஈடுபட நம்மைத் தூண்டுகிறது! சிறுவர் ஊழியங்கள் இவ்வரலாறுகளைத் தம் பாடநெறிகளில் பயன்படுத்த ஆரம்பிக்கிறார்கள்.

வேதாகம வரலாற்றின் தொடர்ச்சியாக நம் சொந்த சபைகளின் வரலாற்றையும், அதின் தொடர்ச்சியாக தேவ திட்டத்தில் நம் வாழ்வின் சமகால நோக்கத்தையும் கோர்வையாக அறிந்துகொள்ளும்படி ஆண்டவர் நம் கண்களைத் திறப்பாராக! அவருக்காய் செயல்பட நம்மைத் தூண்டுவாராக.

தொடரட்டும் இந்த நற்பணி!


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com



# சி. எஸ். ஐ.
# செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயம், சாந்தோம்

பேசும் பொம்மை ஷாந்தகுமார்,
சென்னை

**செயின்ட் தாமஸ் கடற்கரை ஆலயம் (1842-2024):**

சென்னையில் உள்ள ஆங்கிலிக்க ஆலயங்களில் ஒரு பழமையான ஆலயமான செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயத்தின் துவக்கம் வேப்பேரி மிஷனில் உள்ள திருப்பணியாளர்களுக்குக் கடன்பட்டுள்ளது. மறைதிரு ராபர்ட் கார்வர் என்பவர் இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிக்கு முக்கியமான காரணகர்த்தா. இவ்வாலயம் 1842-ஆம் ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கடற்கரை ஆலயம் என்றழைக்கப்பட்ட இது எப்பொழுதும் வெண்மையாகப் பளிச்சென்று இருப்பது அழகுக்கு அழகு சேர்க்கிறது.

**சாந்தோம் கோட்டை:**

மைலாப்பூரில் உள்ள சாந்தோமுக்கு பழைய சரித்திரம் உண்டு. புனித தோமாவை நினைவு படுத்தும்படி San Thome என்ற இப்பெயரை வழங்கிய போர்ச்சுக்கீசியர் 16-ஆம் நூற்றாண்டில் இங்கு ஒரு கோட்டையைக் கட்டினர் எனும் செய்தி பலருக்கும் ஆச்சரியமளிக்கக் கூடும். **'அது செயின்ட் ஜார்ஜ் கோட்டையை விட இரு மடங்கு பெரியது. இதனுள் நான்கு ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன'** என்பன கூடுதல் செய்தி, இதனுடைய ஒரு வரை படம் மெட்ராஸ் 1639-இல் ஸ்தாபிக்கப்படுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டது. இக்கோட்டையைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ள டச்சுக்காரர்கள், ஃப்ரெஞ்ச் நாட்டினர் மற்றும் ஆங்கிலேயர்கள் பல முறை போராடினர். இறுதியில் ஆங்கிலேயர்கள் இவ்விடத்தை 1749-இல் கைப்பற்றினர்.

**வேப்பேரி மிஷன்:**

ஆரம்ப காலங்களில், செயின்ட் தாமஸ் ஆலயம், வேப்பேரி மிஷனுடன் இணைந்திருந்தது. இந்த வேப்பேரி ஆலயம் இந்தியாவில் சர்ச் ஆஃப் இங்கிலாந்தினால் துவக்கப்பட்ட மிகவும் பழமையான ஆலயமாகும். வேப்பேரி மிஷன் 1728-இல் தரங்கம்பாடியில் டேனிஷ் மிஷனின் தலைவராக இருந்த பெஞ்சமின் ஸ்கல்ட்ஸ் என்பவரின் பரிந்துரையால், டென்மார்க்கில் இருந்த அரசரின் அனுமதியோடும், கிழக்கிந்திய கம்பெனியின் பாதுகாப்புக்கான வாக்குறுதியோடும் துவங்கப்பட்டது. ஆனால் 1826-இல் வேப்பேரி மிஷனின் செயல்கள் முடிவடைந்தன.

**வெஸ்லியன் காலம்:**

1822-இல் எலிஜா ஹூல் என்பவர் மெதடிஸ்ட் மிஷனுக்காக இந்தியாவுக்கு வந்தார். இரண்டு வருடங்கள் கழித்து அவர் ஐரோப்பியர்களுக்கான ஊழியத்தில் மட்டுமே ஈடுபட்டார். சாந்தோம் ஆலயத்துக்கு 1824-ஆம் வருடம் முக்கியமானது. காரணம் ராபர்ட் கார்வர் எனும் ஊக்கமும், அனுபவமும் நிறைந்த மெதடிஸ்ட் ஊழியர் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது சென்னைக் கோட்டையில் கவர்னராக பணிபுரிந்த சர் தாமஸ் மன்றோ எனும் புகழ் பெற்ற கவர்னரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்தார். பிறகு பழைய வேப்பேரி மிஷன் மற்றும் பூந்தமல்லி, செயின்ட் தாமஸ் மவுண்ட், பல்லாவரம் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களுக்குப் பொறுப்பேற்றார். அவருடைய சேவையை ஆங்கிலேயர், ஐரோப்பியர், சென்னைவாசிகள் ஆகிய அனைவரும் பாராட்டினர்.

1830-இல் கல்கத்தாவின் பிஷப் டர்னர் சாந்தோமுக்கு விஜயம் செய்தார். உடல் நலம் குறைந்த அலுவலர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் உடல் நலம் பேணுமிடமாக சாந்தோம் அமைந்ததால், ஐரோப்பியர்கள் அதிக அளவில் இங்கு வாழ்ந்தனர் என்பதைக் கண்ட அவர், அங்கு ஒரு ஆலயமும், ஆயரும் உருவாக்கப்பட வேண்டும் எனக் கருதினார். அதற்காக அவரே ஒரு கட்டடத்தோடு கூடிய நிலத்தையும் தன் அன்பளிப்பாக வாங்கினார். ஆனால் அதை யாரும் பயன்படுத்தவில்லை. 1836-இல் சென்னையில் இருந்த பிஷப் டேனியல் காரீ என்பவர் வீட்டுச் சங்கத்துக்கு (Home Society) கடிதம் எழுதி அரசிடமிருந்து 200 பவுண்டை மானியமாக வாங்கினார். பிஷப்பின் மகள்,

அவளுடைய தோழிகளோடு இணைந்து, சந்தாக்கள் வசூலித்து ஒரு கிறித்தவ ஆசிரியரைப் பணியில் அமர்த்தினர். அவருடைய வேலை சாந்தோமில் உள்ள கிறித்தவர்களை ஒன்றிணைத்து, அவர்களுக்காக வேதாகம வசனங்களைப் படிப்பதாகும். ஆனால் பிஷப் காரீ 1837-இல் திடீரென்று இறந்ததால் ஆலயக் கட்டுமானப் பணி மேலும் தாமதமானது.

### எஸ். பி. ஜி. காலம்:

1837-இல், கார்வர் மன்னார்குடிக்கு மாற்றப்பட்டார். அவருக்குப் பிறகு, ஜி. யு. போப் எனும் புகழ் பெற்ற தமிழ் ஆய்வாளர் அவரிடத்தில் பொறுப்பேற்றார். இதற்கிடையில் சாந்தோம் ஆலயப் பணியைப் புதுப்பிக்க மெதடிஸ்ட் மிஷன் முடிவெடுத்தது. வேப்பேரி மிஷனில் பணி புரிந்த மறைதிரு எ. சி. தாம்ப்ஸன் என்பவரை சாந்தோம் மிஷனுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் நவம்பர் 1837 முதல் ஆங்கிலத்திலும், தமிழிலும் சுவிசேஷத்தைப் போதித்தார். 1838-இல் ஆங்கில வழிபாட்டுக்கு 23 நபர்களும், தமிழ் வழிபாட்டுக்கு 40 நபர்களும் வந்தனர். ஆங்கிலப் பள்ளியில் 23 பிள்ளைகள் படித்தனர். தமிழ் பள்ளி ஆரம்பிக்கப்பட்டாலும், அதற்குச் சரியாக பிள்ளைகள் வரவில்லை.


தாம்ப்ஸன் சாந்தோமில் ஆலயக் கட்டுமானப் பணியைத் துவக்கினார். இதற்காக சென்னைப் பெருநகர அலுவலகத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரத்தையும், மற்றவர்களிடமிருந்து சிறிய தொகைகளையும் வசூல் செய்தார். ஆனால் 1839-இல் அவர் இங்கிலாந்துக்கு செல்ல நேரிட்டதால், கட்டடப் பணி மீண்டும் தொய்வடைந்தது. லண்டன் மிஷனரி சொஸைட்டியில் பணிபுரிந்த மறைதிரு டபுள்யு. டெயிலரிடம் சாந்தோம் ஆலயப் பணியும், செயின்ட் தாமஸ் மவுண்டு ஆலயமும் ஒப்படைக்கப்பட்டன.

### 1842–இல் செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயப் பிரதிஷ்டை:

1841-இல் அப்பொழுது இருந்த சென்னைப் பிஷப்பின் உரிமத்தோடு (லைசன்ஸ்) ராபர்ட் கார்வர் மீண்டும் சாந்தோம் பணியில் இணைந்தார். அவர் 1842-இல் போதகராக நியமிக்கப் பட்டார். அந்த வருடம் டிசம்பரில், அதிக நிதி வசூலிக்கப்பட்டு, கட்டுமானப் பணி முடிவடைந்தது, ('தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக்கூட இருந்து கட்டுவார்கள்!' சகரியா 6:15. ) இப்பொழுது இருக்கும் செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயம் சென்னையின் பிஷப் ஸ்பென்ஸரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்கு அருகிலேயே கல்லறைத் தோட்டமும் திறக்கப்பட்டது. 1845-இல் கார்வர் மூளைக் காய்ச்சலால் இறந்து விட்டார். அவருடைய பூத உடல் ஆலயத் தொழுகை மேடைக்கு (ஆல்டர்) அடியில் புதைக்கப் பட்டது. அவர் இறந்த சமயத்தில் ஊரில் இல்லாத பிஷப் மிகவும் வருந்தினார். கார்வருடைய கல்லறையில் உள்ள வரைப் பட்டிகையின் (Tablet) கல்வெட்டில் பிஷப் கார்வரைப் பற்றி எழுதிக் கொடுத்த வார்த்தைகள் பொறிக்கப்பட்டன.

### செயின்ட் தாமஸ் தமிழ் ஆலயம்:

சாந்தோமில் ஆங்கில வழிபாடும், தமிழ் வழிபாடும் 1848-இல் தனித் தனியாக நடத்தப்பட்டன. மறைதிரு எ. ஆர். சைமண்ட்ஸ் சென்னை எஸ். பி. ஜி. -இல் செயலாளராக இருந்த



போது, தமிழ் சபைக்காக பழைய வெஸ்லியன் சிற்றாலயத்தை (Chapel) விலைக்கு வாங்கினார். அதில் தமிழ் ஆலயம் துவங்கியது.

### செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயத்தில் ஐரோப்பியர்கள்:

1856-இலிருந்து ஆங்கில ஆலயத்தை அரசுக்கு விற்று அரசாங்கக் குருத்துவமாக மாற்ற பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பிய சபையும், இந்திய சபையும் சேர்ந்து பல ஆலயங்களில் தொழுகை செய்வதை அப்பொழுது சில தலைவர்கள் விரும்பவில்லை. மேலும் பிஷப், மற்றும் எஸ். பி. ஜி. யும் ஊழியப் பணத்தை ஐரோப்பிய சபைக்கு செலவு செய்வதை விரும்பவில்லை. அச்சமயத்தில் செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயம் பிரபலமானதாகவும், நாகரீகமாகவும் இருந்தது. காரணம், சென்னையின் கவர்னரும், (அவருக்காக பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ) சென்னையின் உயர் அந்தஸ்துள்ள கனவான்களும் ஆலயத்துக்கு வருகை தந்தனர். அவர்கள் எஸ். பி. ஜி. -இக்காக அபரிதமான காணிக்கை வழங்கினர். அதனால் ஆலயக் கட்டடம், பள்ளி, போதகரின் உறைவிம் ஆகியவற்றைக் கட்டும் பணியை அரசிடம் ஒப்படைக்க முயற்சிக்கப்பட்டது. தலைமைப் பொறியாளர் அவற்றுக்கான செலவை ரூ. 20,068 என்று மதிப்பிட்டார். ஆனால் அந்த முயற்சி பல காரணங்களால் செயல் படுத்தப்படவேயில்லை. நடந்தது என்னவோ, 1863-இல் அரசிடமிருந்து ஆங்கிலேய சபைக்கான சமயப் பணிக்காகவும், கல்லறைத் தோட்டத்தைப் பயன்படுத்துவதற்காகவும் மாதா மாதம் ரூ. 100/- வழங்கப்பட்டது.

அச்சமயத்தில் சென்னை எஸ். பி. ஜி. -இன் செயலாளர்கள், ரங்கூனின் பிஷப், செயின்ட் பவுல் உயர் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், மற்றும் கதீட்ரல்



ஆலயத்தின் போதகர் டேவிட் செல்லப்பா (பின்னாட்களில் இவர் தென்னிந்திய திருச்சபையின் சென்னை மறை மாவட்டத்துக்கான இரண்டாவது பிஷப்பாகவும் 'முதல் இந்திய பிஷப்பாகவும்' தேர்வு செய்யப்பட்டார். ) முதலியோர் இவ்வாலயத்தைப் பொறுப்பேற்று அடுத்தடுத்து போதகர்களாகப் பணி புரிந்தனர்.

**1942-இல் நூற்றாண்டு விழா:**

ஆலயத்தின் நூற்றாண்டு விழா 1942-இல் நடந்தது. ஆனால் அது அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. காரணம் சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. சாந்தோமில் அதிகமாக வாழும் கத்தோலிக்க குடும்பங்களோடு கலப்புத் திருமணம் நடந்ததும் ஒரு முக்கியக் காரணமாகும். மேலும் சாந்தோம் கிறித்தவர்கள் மற்ற இடங்களுக்கு ஜாகை மாறியதால், ஆலயத்தின் வருமானமும் குறைந்தது. இருப்பினும், சிறிய அளவிலான ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும், ஆங்கிலம் பேசும் இந்தியர்களும் இந்த ஆலயத்துக்கு வருகை தந்து ஆதரவு நல்கினார்கள்.

**தென்னிந்திய திருச்சபையின் கீழ்:**

நம் நாடு சுதந்திரம் அடையும் தருவாயில், இந்திய ஆலயங்கள் ஒரே திருச்சபையை உருவாக்க முடிவெடுத்தன. எனவே தென்னிந்திய ஆலயங்கள் சேர்ந்து, தென்னிந்திய திருச்சபையை உருவாக்கின. 27. 9. 1947 அன்று ஆங்கிலிகன்ஸ், மெதொடிஸ்ட்ஸ், ப்ரெஸ்பிடீரியன்ஸ் ஆகியவர்கள் இணைந்து இதற்கான துவக்க விழாவை நடத்தினர். ஆங்கிலிகன் வழி முறையில் வந்த சாந்தோமில் உள்ள செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயம் தென்னிந்திய திருச்சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் அதனுடைய பாரம்பரிய வழி முறையைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

கடவுளுடன் நெருங்கி வாழ்ந்த, மறைதிரு ஹானஸ்ட் சின்னையா, மறைதிரு எஃப். பி. கிறிஸ்டியன், மறைதிரு ஆர். எல். மான்சன், மறைதிரு பீஸ் பி. டேவிட், மறைதிரு எபநேசர் இம்மானுவேல் போன்றவர்கள் அக்காலத்தில் ஆலயப் போதகர்களாகப் பணி புரிந்தனர். மேலும், 1945-இலிருந்து, கிறைஸ்ட் சர்ச் ஆங்கிலோ இந்தியன் மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த திரு டேவிட் சாமுவேல் அவர்கள் செயின்ட் தாமஸ் ஆங்கில ஆலயத்தில் நாற்பது ஆண்டுகளாக சிறப்பாகப் போதனை செய்து வந்தார். போதகர்கள் குறைவாக இருந்த அக்காலத்தில், பிஷப் மறைதிரு ஹாலிஸ் அவர்கள் டேவிட் சாமுவேலை சென்னை மறை மாவட்டத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் போதனை செய்ய அனுமதி வழங்கியிருந்தார்.

**175-ஆம் ஆண்டு விழா:**

2017-இல் இவ்வாலயம் 175-ஆம் ஆண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடியது. அச்சமயத்தில் ஆலயம் சம்பந்தமான ஒரு ஆவணப் படம் வெளியிட்டுள்ளது. 'ட்ரோன்' மூலம் படங்களும், காணொளியும் எடுத்தது மறக்க முடியாதத் தருணமாகும்.

## இவ்வாலயத்தின் சேவைகள்:

**ஞாயிறு புல்லட்டின் (சிற்றேடு):**

1999-இலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அன்றைய தினத்தின் ஒழுங்கு முறையின் நிகழ்ச்சி நிரலையும், மற்றும் ஒரு சிறு கதை மூலம் தேவச் செய்தியையும் ஒரு நான்கு பக்க புல்லட்டினில் அச்சடித்து சபையாருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**இயான் மி எனும் மாத இதழ்:**

ஒவ்வொரு மாத முதல் ஞாயிறு அன்றும் மாத இதழ் அச்சடிக்கப்பட்டு நுழைவாயிலில் சபையாருக்காக வைக்கப் பட்டிருக்கிறது. இதில் போதகருடைய செய்தியும், சபையார் எழுதிய கட்டுரைகள், கதைகள், கவிதைகள், முக்கிய அறிவிப்புகள், ஆலய அறிக்கைகள் (Reports) முதலியவை அதில் இடம் பெற்றிருக்கும். உலகில் உள்ள ஏதாவது ஒரு ஆலயத்தின் படம் அட்டையை அலங்கரிக்கும். இயான் மியும், புல்லட்டினும் ஆன் லைனில் படிக்கும் வசதியும் உள்ளது.

இயான் மி என்பது ஒரு கிரேக்க வார்த்தை. அதற்குத் 'தவிர' அல்லது 'ஒழிய' (unless) என்று அர்த்தம். இதனுடைய மூலம் புனித தோமாவின் சந்தேக வார்த்தைகளில் உள்ளது. (என் கையை அவருடைய விலாவிலே போட்டால் ஒழிய விசுவாசிக்க மாட்டேன்...- யோவான் 20:25)

**இதர சேவைகள்:**

இவ்வாலயத்தின் ஞாயிறு பள்ளியை க்ரேஸ் ரத்னமும், பாடல் குழுவை அனிலா மனோகரனும், சுவிசேஷ ஊழியத்தை அஜித் ஸ்டேன்லி மோசஸும், பெண்கள் ஐக்கியக் குழுவை லீனா பொன்னுதுரையும், ஆண்கள் ஐக்கியக் குழுவை ரஞ்சன் செல்வகுமாரும், வாலிப ஐக்கியக் குழுவை ஸ்விதன் மனோகரன் மற்றும் டாக்டர் ஹானா ரோஸலினும், வயது வந்தோரின் ஐக்கியக் குழுவை ஷோபனா சவுந்தர பாண்டியனும், நோயாளிகளுக்கான பிரார்த்தனைக் குழுவான ராஃபாவை ரஞ்சனி இன்பராஜும், பள்ளி ஊழியத்தை ஜெமினா மார்டினும், தோட்டத்தைப் பராமரிக்க பிரேமலதா சாமுவேலும், புல்லட்டின். மற்றும் ஆலய வெப்சைட்டை கவிதா எட்வர்டும், இயான் மி, ஃபேஸ்புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றை ஃபேபியோலா ஜேக்கப்பும், இயான் மியின் அட்டைப் படம், மற்றும் லே அவுட்டை அனிலா மனோகரனும், வி. பி. எஸ்ஸை ஷில்பா மல்ஹோத்ராவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றுகின்றனர்.

**ஆலயத்தின் சிறப்பம்சங்கள்:**

இவ்வாலயத்தின் ஆயர் குழுவுக்கானத் தேர்தல் நடக்காமல் சபையாரே நியமிப்பது எந்த ஆலயத்திலும் காண முடியாத ஒரு அபூர்வ நிகழ்வாகும். காரணம் இந்த ஆலயத்தில் அனைவரும் அவ்வளவு ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். ஆலய அலுவல்களில், மற்றவர்களுக்கு உதவுவதில் மட்டுமே ஒருவருக்கொருவர் போட்டி!

வயதானவர்களும், மருத்துவர்களும் அதிக எண்ணிக்கையில் இருப்பது இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பு. மேலும், சபையில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தாலந்து மிக்கவர்கள் அதிகம். உதாரணத்துக்கு இசைக் கருவிகள் வாசிப்பதிலும், கடவுளுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்வதிலும் அதிக திறமைசாலிகள் உள்ளனர். மொத்தத்தில்



தலைவர்களுக்கான அடிப்படைத் தகுதிகள் நிறையச் சபையாரிடம் பார்க்க முடிகிறது. சிறு வயதினரை ஞாயிறுப் பள்ளியிலிருந்தே ஆயத்தப் படுத்துவதே இதற்குக் காரணம்.

ஆலயப் பணிகளுக்காகவும், மற்றவர்களுக்காகவும் அள்ளிக் கொடுக்கும் திருச்சபையாக இது விளங்குகிறது. இது வரை அருகில் உள்ள கிராமங்களில் மூன்று ஆலயங்களையும், ஒரு சிற்றாலயத்தையும் (Chapel), ஒரு பள்ளியையும் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். சுனாமியின் போது, உதவிக் கரம் நீட்டியிருக்கிறது. மேலும் செயலாளர் எஸ். ரபீந்தர் போவாஸ், மற்றும் பொருளாளர் ஜெமீனா மார்ட்டினின் தலைமையில் இதனுடைய ஆலயக் கட்டடம் சமீபத்தில் சிறப்பான முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் பாடகர் குழு அக்காலத்திலிருந்தே வெகு சிறப்பாக இயங்கி வருகிறது. முக்கிய நாட்களில் இந்த ஆலயத்தில் மட்டுமல்லாமல், மற்ற ஆலயங்களின் அழைப்பின் பேரில் அங்கு சென்று பாடி பாராட்டு பெரும் அளவுக்கு நல்ல தரம் வாய்ந்த குழுவாகும்.

இவ்வாலயத்தின் பைப் ஆர்கன் 1868-இல் உருவாக்கப் பட்டது. இது இந்தியாவிலேயே பழமை வாய்ந்த ஆர்கனில் ஒன்றாகத் திகழ்கிறது. சென்னை வாரம் கொண்டாடப்படும்போது, மக்கள் திரளாக வந்து இந்த ஆர்கனையும் தரிசித்து விட்டுச் செல்வர். அச்சமயங்களில் அனிலா மனோகரன் இதனை வாசித்து அவர்களைப் பரவசமூட்டுவார்.

கடந்த மூன்று வருடங்களாக, குருத்தோலை ஞாயிறு அன்று, அருகே உள்ள கத்தோலிக்க பஸிலிகா திருச்சபையும், சி. எஸ். ஐ. செயின்ட் தாமஸ் தமிழ் ஆலயமும் இவ்வாலயத்தோடு இணைந்து கூட்டு ஊர்வலத்தில் கலந்து கொள்வது ஒரு விசேஷித்த நிகழ்வாகக் கருதப்படுகிறது. இது கிறித்தவ திருச்சபைகளின் ஒன்றிணைப்புக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகும்.

இச்சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை மளமளவென்று ஏறி, தற்போது அது 300 குடும்பங்களைத் தாண்டிவிட்டது. மேலும் கிராம ஊழியங்களுக்கு இச்சபை முக்கியத்துவம் அளித்து வருகிறது. இப்பொழுது பணியிலிருக்கும் போதகரான மறைதிரு அனிதா கிறிஸ்தியன் ஏழைகளின் விடுதிகளுக்கு சபையாரோடு சென்று ஊழியம் செய்கிறார். ஒவ்வொரு வாரமும் புதிய நிகழ்ச்சிகள் மூலம் சபையாரை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார். மொத்தத்தில் இவ்வாலயம் துடிப்புடன் செயல்பட்டு வருகிறது என்றால் அது மிகையாகாது.

**ஆலயப் பள்ளி:**

சி. எஸ். ஐ. செயின்ட் தாமஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் 1983-இல் கிடைத்தது. இப்பள்ளி 1985-இல் துவக்கப்பட்டது. "Arise and Shine" என்பது இப்பள்ளியின் குறிக்கோள். டோரா ரிச்சர்ட் என்பவர் முதல் தலைமை ஆசிரியை.

ஆங்கிலப் பயிற்று மொழி மூலமாகக் கற்பிக்க, சிறுவர் இல்லம் மற்றும் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றைத் துவக்க வேண்டும் என்ற ஒரு கனவு இச்சபையாருக்கு, முக்கியமாக ஆலய உறுப்பினர்களான லேட் டாக்டர் ரிச்சர்ட் மாசிலாமணி. லேட் எம். சாமுவேல் சந்திரகுமார், ஏஞ்சல் பொன்னையா மற்றும் கிளெமெண்ட் மோசஸுக்கு தொற்றிக் கொண்டது. இவ்வாலயத்தைச் சுற்றிலும் உள்ள ஏழைகள், முக்கியமாக மீன் பிடிப்போர் மற்றும் வீட்டு வேலை செய்வோரின் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இப்பள்ளி. தங்கள் பிள்ளைகளை நல்ல ஆங்கில வழிப் பள்ளியில், சொற்ப செலவில் படிக்க வைக்க வேண்டும் என்ற தீராதக் கனவோடு ஏங்கிய அந்த ஏழைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இப்பள்ளி அமைந்திருக்கிறது!

பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கையும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும், மற்றும் செலவும் கூட அதிகமானது. வருமானத்தை அதிகரிக்க பள்ளிக் கட்டணத்தை உயர்த்த வேண்டியது அவசியமாயிற்று. மேலும் நிதி திரட்டுவதற்காக, நாரத கான சபாவில் "We are the Children!" எனும் நிகழ்ச்சியும் "Around the World in Eighteen Minutes!" எனும் நிகழ்ச்சியும் மிக மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. இதனால் ஆலயத்துக்கு ரூ. 70,000/- வருமானமாகக் கிடைத்தது. தற்போது இரு நூறுக்கு மேல் மாணவர்கள் படிக்கின்றனர். பதினொரு ஆசிரியர்கள் பணி புரிகின்றனர்.

**முடிவுரை:**

செயின்ட் தாமஸ் தன்னுடைய பெயரை இந்த வெண்மை நிற ஆலயத்துக்கு வழங்கினார் என்பது மட்டும் முக்கியமல்ல. அவர் அக்காலத்தில் இக்கடற்கரையில் நடந்தார் என்பதை நினைக்கும்போது நமக்குப் புல்லரிக்கிறது! ப்ராட்டஸ்டன்ட் ஆலயங்களிலேயே பழமையான இவ்வாலயத்தின் வயது 182 என்பது நமக்குக் கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது. அக்காலத்தில் ஆரோக்கியப் புகலிடமாக (resort) இருந்த இந்த சாந்தோமில் இன்றும் ஆரோக்கியம் மற்றும் மன அமைதி வழங்கும் இடமாக இவ்வாலயம் அமைந்துள்ளது என்பது ஒரு சிறப்பான விஷயம் அல்லவா? அக்காலத்தில் கவர்னர், ஐரோப்பியர்கள், மற்றும் கனவான்கள் போன்ற மேலோர் வருகை தந்த ஆலயத்தில் இன்று நாம் அங்கத்தினர்களாக இருப்பது நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகிறது.

"ஆலயத்துக்கு நாம் செல்வது நம்மையே ஆலயமாக மாற்றிக் கொள்வதற்கே!" - வேனஸா லின்





சேலம் லெக்லர் ஆலயத்தின் ஓவியம்

# சேலம் கோட்டை
# சி. எஸ். ஐ. லெக்லர் நினைவாலயம்

**ஜே.பர்னபாஸ்**
சேலம் வரலாற்றுச் சங்கம்

சேலம் மாநகரில் இன்றும் நிலைத்திருக்கும் மிகவும் பழமையான கிறிஸ்தவ தேவாலயம் சேலம் கோட்டை பகுதியில் உள்ள சி. எஸ். ஐ. ஆண்கள் மேனிலைப் பள்ளி வளாகத்திற்கு அருகில் உள்ள சி. எஸ். ஐ. லெக்லர் நினைவாலயம் தான். இந்த தேவாலயம் இன்றைக்கு 171 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டுமானம் ஆகும். சேலம் வாழ் சீர்திருத்த கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கையின் சின்னமாக (Symbol of Faith) விளங்கி வரும் இந்த தேவாலயம் கிழக்கு ஜெர்மானிய பாணியில் 1853 ஆம் ஆண்டில், ஜெர்மானியரான லண்டன் மிஷன் திருத்தொண்டர் சங்கை ஜான் மைக்கேல் லெக்லர் ஐயரால் கட்டப்பட்டது.


### *அன்றைய சேலம் நகரில் ஒரு சுதேசி தேவாலயம்:*

1852 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் இந்த தேவாலயத்திற்கான அஸ்திவாரம் சங்கை லெக்லர் ஐயரால் போடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவக்கம் கண்டது. 60 அடி நீளமும், 40 அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த தேவாலயம் சங்கை லெக்லர் ஐயர் மற்றும் அவருடன் சேலம் தொழிற்கல்வி பயிலகத்தின் (Industrial School) பணிசெய்துவந்த ஜெர்மானிய பொறியாளர்களான திரு. கார்ல் இராம் (Mr. Carl Rahm), திரு. போசிங்கர் (Mr. Bosinger) ஆகியோரின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. சேலம் தொழிற்கல்வி பயிலகத்தின் மாணவர்களால் உருவாக்கப்பட்ட செங்கல், ஓடு, இரும்பு சாமான்கள், மரஉத்திரங்கள், மரச் சாமான்கள் ஆகியவற்றைக் கொண்டு தொழிற்கல்வி பயிலகத்தின் கட்டிட வேலைப் பிரிவில் பணிசெய்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கொத்தனார்கள் உதவி கொண்டு, இப்படியாக இந்திய பொருட்களைக் கொண்டு, இந்திய கரங்களால் முற்றிலுமாக கட்டி முடிக்கப்பட்ட சுதேசி தேவாலயம் என்ற பெருமையை இந்த தேவாலயம் பெற்றது. மேலும் இந்த ஆலய கட்டுமானப் பணியின்போது திருச்சபை உறுப்பினர்கள் குடும்பம் குடும்பமாக கட்டுமானப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்தனர். ஒரு கொத்தனார் மற்றும் சில உதவியாளர்களைத் தவிர மற்றபடி அனைவருமே சுதேச கிறிஸ்தவர்கள். (one other striking feature was that the whole Church, from top to bottom, was erected by Christian hands except for one Hindu maistry and a few workmen who had to be employed at the last moment.) தேவாலயத்திற்கு தேவையான கண்ணாடிகள் மட்டும் இங்கிலாந்து தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டது; மற்றபடி அனைத்தும் இங்கேயே சேலம் தொழிற்கல்வி பயிலகத்தில் உருவாக்கப்பட்டது. (The bricks were made in the compound, all the Smith and Carpenter work was done in the Industrial School ; the glass only was got from England'- p. no. 240, The Gazetteer of the Salem District -Vol. 1- Part-2, - F. J. Richards, I. C. S. , Madras, 1918)

இந்த ஆலய கட்டுமானத்தைக் குறித்து சங்கை T. C. விட்னி ஐயர் தனது 'A Hundred Years of Salem Mission History' (P.nos.20,21) என்ற நூலில் குறிப்பிடும்போது **'இதுபோன்றதொரு மகத்தான முயற்சி நவீன இந்தியாவிலேயே இங்குதான் நிகழ்த்தப்பட்டது. நிலையான பிரமாண்டமான ஆலயம், அதன் பலமான தூண்களுடன் ஒரு சிறப்பான உட்புற தோற்றத்தைக் கொடுத்தது. ஏறத்தாழ தற்பொழுது எண்பது ஆண்டுகள்**



ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டபோது அது இப்படித்தான் இருந்தது. ஆலயத்தின் ஒரு பழமையான படம் இது. ஆலயத்தின் முன்புற முற்றம் சிறிய அளவில் இப்படித்தான் அப்பொழுது அமைக்கப்பட்டு இருந்தது. இந்த படத்தின் கீழே Mission Church at Salem in Madras Presidency என்று எழுதப்பட்டிருக்கிறது.



1910ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இந்த ஒளிப்படத்தில் தூண்களால் தாங்கப்பட்ட லெக்லர் ஐயரால் 1856ல் அமைக்கப்பட்ட இந்நாள் வரை நிலைத்திருக்கும் ரோமானிய பாணி முற்றம் தெளிவாகத் தெரிகிறது. (2009ல் நடந்த விரிவாக்கமும் புதுப்பித்தல் பணிகளின்போதும் சில மாற்றங்கள் ஆலய அமைப்பில் செய்யப்பட்டன; குறிப்பாக முன்பக்கம் இருந்த இரண்டுத் தூண்கள் அகற்றப்பட்டு முற்றத்தின் வாசல் விரிவாக்கப்பட்டது.)

**பயன்பாட்டையும் கடந்து, அது இன்னும் வருங்காலங்களிலும் போதுமானதாக இருக்கும்'** என்று தீர்க்கதரிசனமாக உரைத்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

1853ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்த தேவாலயம் கட்டிமுடிக்கப்பட்டது. 1854 ஆம் ஆண்டு துவக்கத்தில் சங்கை லெக்லர் ஐயர் ஐரோப்பாவிற்கு விடுமுறையில் (furlough) செல்ல திட்டமிட்டிருந்ததால், அவர் ஆலயத்தை 1853ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் நாள் மங்கலப்படைப்பு செய்து, மக்கள் வழிபாட்டிற்காக திறந்துவைத்தார்.

விடுமுறைக் காலத்தை முடித்துக் கொண்டு 1856ல் சேலம் திரும்பிய லெக்லர் ஐயர், அந்த சிறிய Round Topped Portico வை அகற்றிவிட்டு, தூண்களால் தாங்கப்பட்ட வடிவமைப்பான ரோமானிய பாணியிலான (Roman Style Porch) உயர்ந்த பெரிய முற்றத்தைக் கட்டி, ஆலயத்திற்கு கூடுதலாக சில கட்டுமானங்களை செய்து, மீண்டுமாக ஆலயத்தை அந்த ஆண்டில் மங்கலப்படைப்பு செய்து திறந்து வைத்தார். அதைத்தான் அந்த முற்றத்தின் முன்பக்கத்தில் பதிக்கப்பட்ட '1856' என்ற கல்வெட்டு பொறிப்பு சொல்கிறது. , "It is possible, as the date on the Porch is 1856, that after his return from furlough Lechler enlarged the building'- Rev. T. C. Witney in his book " A Hundred Years of Salem Mission History p. no. 20. (இந்த கடப்பா கல்வெட்டு 2009 ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டு சிறிய மாற்றங்களுடன் புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தின் மேற்பகுதியில் பதிக்கப்பட்டுள்ளது.)

### சேலம் லெக்லர் ஆலயத்தின் ஓவியம்:

1914ஆம் ஆண்டு சேலம் லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் (இன்று CSI ஆண்கள் மேனிலைப் பள்ளி என்பது அதன் தொடர்ச்சி) படித்த S. திருவேங்கடம் என்ற மாணவன் வரைந்த இந்த லெக்லர் ஆலயத்தின் படம், 1914 ஆம் ஆண்டு அன்று லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் நடந்த ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற ஓவியம் ஆகும். 'Sketched and painted by S. Thiruvengadam - a student. இதை எழுதியது S. திருவேங்கடம் 1914 ' என்று அந்த ஓவியத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த திரு. S. திருவேங்கடம் என்பவரது குடும்ப வழித் தோன்றல் ஒருவரால் இந்த படம் சேலம் வரலாற்றுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு அது சங்க அலுவலகத்தில் இன்று பாதுகாக்கப்பட்டுள்ளது.

### ஐம்பதாம் ஆண்டு ஜூபிலி கொண்டாட்டம் :

ஆலயம் கட்டப்பட்டு ஐம்பதாம் ஆண்டு கொண்டாட்டம் 1906 ஆம் ஆண்டு வந்தது. அதனை முன்னிட்டு ஆலயத்தை பழுதுபார்த்துப் புதுப்பிக்கும்பணி நடைபெற்றது. (It was renovated and re-roofed in 1906. p. no. 240 Gazetteer of the Salem District -Vol. 1-part-2 - F. J. Richards, I. C. S., Madras, 1918.) அப்பொழுது தேவாலயத்தின் உட்புறத்தில் பலிபீடச் சுவற்றில் சங்கை J. M. லெக்லர் ஐயரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய பளிங்கு கல்வெட்டு (Marble Plaque) பதிக்கப்பட்டது. இந்த ஜூபிலி கொண்டாட்டங்களுக்கு சேலம் நகரிலிருந்தும், அதன் சுற்றுப் புறங்களிலிருந்தும், கிறிஸ்தவ மக்கள் திரளாக வந்திருந்தனர். மிகவும் சிறப்பாக இந்த ஜூபிலி கொண்டாட்டங்கள் நடைபெற்றது. 1947ஆம் ஆண்டிலிருந்து இந்த தேவாலயம் லெக்லர் நினைவாலயம் என அழைக்கப்பட்டு வருகின்றது.

### சமீபத்திய நிகழ்வுகள் :

கடந்த 2005 அக்டோபரில் பழமையான இந்த

தேவாலயத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு, அந்த இடத்தில் புதிய தேவாலயத்தைக் கட்ட தேவாலய நிர்வாகிகள் முடிவு செய்திருந்தபோது, சேலம் வரலாற்றுச் சங்கம் இந்த முடிவை வன்மையாக எதிர்த்தது. தேவாலயத்தின் வரலாற்றுப் பாரம்பரியமும், பழமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரி, சேலம் வரலாற்றுச் சங்கம் இந்திய தொல்லியல் துறைக்கும், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைக்கும் வேண்டுகோள் விண்ணப்பங்களை அனுப்பியது. அதன்விளைவாக இந்திய அரசின் தொல்லியல் துறை சென்னை வட்டம் தனது இரண்டு ஆய்வாளர்களை 11-11-2005 அன்று அனுப்பி தேவாலய பழமையை ஆய்வு செய்து இந்த ஆலயம் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது என்ற கருத்தை உறுதிப்படுத்தியது. அதேபோல கடந்த 12-1-2006 அன்று சேலம் மாவட்ட தொல்லியல் அதிகாரி திரு. செல்வராஜ் தலைமையில் சேலம் CSI லெக்லர் நினைவாலயத்தில் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தேவாலயத்தின் பழமையை பாதிக்காத வகையில் தேவாலயத்தை விரிவாக்கம் செய்து புதுப்பித்துக் கொள்ளுமாறு தமிழக அரசின் தொல்லியல் துறை தேவாலய நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கியது. இதனால் ஆலயம் முற்றிலுமாக இடிக்கப்பட்டுபோவது தடுக்கப்பட்டு தேவாலயம் பாதுகாக்கப்பட்டது. இது சேலம் வரலாற்றுச் சங்கத்திற்கு கிடைத்த முதல் வெற்றி.

### தேவாலயத்தின் உள்ளே பதிக்கப்பட்டுள்ள நினைவு கல்வெட்டுகள் :

சேலம் கோட்டை லெக்லர் நினைவாலயத்தின் உள்ளே பலிபீட சுவற்றில் சங்கை வில்லியம் இராபின்சன் ஐயரின் மனைவி திருமதி. எலிசபெத் என்ற லிசி அம்மாள் நினைவாக ஒரு பளிங்குக் கல்வெட்டும், சங்கை J. M. லெக்லர் ஐயரின் மகள் திருமதி மேரி ஜேன் (Mrs. Phillips) அம்மையாரின் நினைவாக மற்றுமொரு பளிங்கு கல்வெட்டும், இவைகளுக்கு நடுவே சங்கை J. M. லெக்லர் ஐயரைப் பற்றிய நினைவு பளிங்கு கல்வெட்டு (1906), ஆகியவை பதிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் வலது புறமாக organ வைக்கப்பட்டிருக்கும் இடத்தின் பின்பான சுவற்றில் சேலம் மிஷன் வளாகத்தில் அடக்கமாகியுள்ள மிஷனெரி தாய் திருமதி. ஈடித் எமிலி டிக்னம் அம்மையாரின் (Mrs. Edith Emily Dignum or Mrs. Dignum) நினைவாக ஒரு பளிங்கு கல்வெட்டும் பதிக்கப்பட்டுள்ளது. இந்த அம்மையாரின் கல்லறை லெக்லர் ஐயர் கல்லறை அருகே இருந்தது, அது காலப்போக்கில் அழிந்துவிட்டது. இதனைப் பற்றி சேலம் மாவட்டத்தின் கலெக்டராக இருந்த திரு. F. J. ரிச்சர்ட்ஸ் தனது Gazetteer of the Salem District, Vol. 2, Statistical Appendix for Salem District, 1932, (Supplement to the Salem District Gazetteer, part 1&2) என்ற நூலில் 57ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இதனை மீண்டும் சகோதரி ஆன் மேட்செல் அம்மையாரின் கல்லறையை மீட்டுருவாக்கம் செய்ததுபோல மீண்டும் நிறுவினால் இந்த வரலாறுகள் அனைத்தும் வரலாற்று ஆவணங்கள் நூல்கள் அடிப்படையில் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டு வரலாறு பாதுகாக்கப்படும். இதுவே வரலாற்றை நேசிக்கும் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும் ஆசையுமாக இருக்கிறது.

### தேவாலய விரிவாக்கமும் புதுப்பிப்பும்:

தேவாலயத்தின் பழமையும், பாணியும், அமைப்பும், மாறாத வகையில் தேவாலயம் பின்பக்கமாக அதாவது பலிபீட சுவற்றிலிருந்து விரிவாக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட தேவாலயம் கடந்த 30-8-2009 அன்று கோவைத் திருமண்டல பேராயர் மாணிக்கம் துரை அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டு திறக்கப்பட்டது.

சேலம் வரலாற்றுச் சங்கத்தின் தீவிர முயற்சிகளால் சேலம் மாநகரின் பழமையான தேவாலயம், சேலம் வரலாற்றுப் பாரம்பரியத்தின் அடையாளமான (Symbol of Salem Heritage) சேலம் கோட்டை CSI லெக்லர் நினைவாலயம் முற்றிலுமாக இடிக்கப்பட்டு அகற்றப்பட்டுப் போவதிலிருந்து காப்பாற்றப்பட்டு, இன்று சேலம் வரலாற்றின் சாட்சியாக 171 ஆண்டுகளாக நிலைத்திருக்கிறது.



2005 ஆம் ஆண்டில் சேலம் கோட்டை CSI லெக்லர் நினைவாலயத்தின் அழகிய தோற்றம்.

# அருள்திரு.

# W. T. சத்தியநாதன்




**Rev.G. P. இராஜா**

CSI. பழனி நகர் குருசேகரம்





சத்தியநாதன் 1830 ஆம் ஆண்டு மதுரையில் ஓர் இந்து குடும்பத்தில் பிறந்தார். இவர் இயர் பெயர் திருவேங்கடம். இவருடைய முன்னோர்கள் நாயக்கர் இனத்தைச் சேர்ந்தவர்கள். வியாபரத்தின் நிமித்தமாக திருச்சியிலிருந்து மதுரைக்கு வந்தார்கள். மதுரையில் தன்னுடைய ஆரம்ப கல்வியை தொடங்கினார். சத்தியநாதனுக்கு 13 வயதான பொழுது மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு இவருடைய குடும்பம் குடிபெயர்ந்தது. இவருடைய தகப்பனார் திருநெல்வேலியில்லுள்ள கலெக்டர் அலுவலகத்தில் வேலை பார்த்தார். எனவே திருநெல்வேலிக்கு அருகிலுள்ள சிந்தபூந்துரையில் குடியிருந்தார்கள்.

## உயர்நிலைக்கல்வி :

1845 ஆம் ஆண்டு CMS மூலமாக பாளையங்கோட்டையில் ஓர் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அப்பள்ளியில் திருவேங்கடம் என்ற சத்தியநாதன் உயர்நிலைக்கல்விக்காக அனுப்பப்பட்டார். அப்பள்ளியில் கல்வியை தொடங்கின சத்தியநாதன் கல்வியில் சிறந்து விளங்கினார்.

## கிறிஸ்தவக்கல்விக்கு எதிர்ப்பு:

CMS உயர்நிலைப்பள்ளியில் திருமறைப்பாடம் ஒன்று கற்றுக்கொடுக்கப்பட்டது. எல்லா மாணவர்களும் கற்றுக்கொண்ட நிலையில் சத்தியநாதன் திருமறைப்பாடத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார். எல்லா மாணவர்களையும் ஒன்று சேர்த்து திருமறைப்பாடத்தை தனியாக வந்து கற்றுக்கொள்வதை எதிர்த்து ஆசிரியர்களுக்கு எதிராக குரல் கொடுத்தார். அனைத்து மாணவர்களையும் தூண்டிவிட்டார். வேதபாடத்தை கற்றுக்கொடுப்பதை கைவிடுமாறு சத்தம் போட்டார்கள். ஆனால், ஆசிரியர்கள் அதை கேட்கவில்லை, மாணவர்கள் அனைவரும் பள்ளியை விட்டு வெளியே செல்வோம் என்று மிரட்ட வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். அப்படியே போய் ஆசிரியரிடம் கூறினார்கள். ஆனால் ஆசிரியர்கள் திருமறைப்பாடத்தை கைவிடவில்லை. வேறு வழியின்றி மனவெறுப்போடு மாணவர்களும், சத்தியநாதனும் திருமறைப்பாடத்தை கற்றுக்கொண்டார்கள். ஆசிரியர்கள் திறன்பட திருமறைப்பாடத்தை கற்றுக்கொடுத்தார்கள். சத்தியநாதன் உள்ளத்தில் தூய ஆவியானவர் கிரியை செய்தார். தான் பாவி என்பதை உணர்ந்தார். இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, திருமறைப்பாடத்தை நன்கு கற்றுக்கொள்ள தன்னை அர்ப்பணித்தார்.

## திருமுழுக்கு பெறுதல் :

1847 ஆம் ஆண்டில் திருவேங்கடம் என்ற பெயரை மாற்றி வில்லியம் தாமஸ் சத்தியநாதன் என்ற பெயருடன் அருள்திரு. ஜாண் தாமஸ் அவர்களால் மெஞ்ஞானபுரத்தில் ஞானஸ்நானம் பெற்றார். கிறிஸ்தவராக மாற்றம் பெற்ற பிறகு திரு. சத்தியநாதன் பிஷப் சார்ஜெண்ட் கீழ் உள்ள நிறுவனத்தில் முதலில் மாணவராகவும் பின்பு ஆசிரியராகவும் இளம் வாலிபர்களை கடவுளுக்குள்ளாக நடத்தி வந்தார். இப்பொழுது சிலர் ஊழியர்களாக திருநெல்வேலியில் கடவுளின் நற்செய்திப் பணியை செய்கிறார்கள்.

## சத்தியநாதனுக்கு வந்த பிரச்சனைகள் :

சத்தியநாதன் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதின் விளைவாக, பெற்றோர்களால் கைவிடப்பட்டார். சொந்த இனமக்களால் வெறுக்கப்பட்டார். தனக்கு அருமையாயிருந்த எல்லாவற்றையும் இழக்க ஆயத்தமாகி, இயேசுகிறிஸ்துவின் சிலுவையண்டை வந்தார். அங்கு கிறிஸ்து மூலம் மன அமைதியையும், ஆறுதலையும், இலவசமாய்க் கொடுக்கபட்ட மன்னிப்பையும் பெற்றுக்கொண்டார். இவருடைய மனமாற்றம் திருநெல்வேலி மாவட்ட மக்களிடையே ஒரு பெரிய பரப்பரப்பை ஏற்படுத்தி, CMS உயர்நிலைப்பள்ளியை மாணவர்களற்ற பள்ளியாக மாற்றியது. மேலும் சத்தியநாதனைப் பல உபத்திரவங்களுக்குட்படுத்திக் குற்றவியல் நடுவர் வழக்கு மன்றம் முன்பாக நிறுத்தியது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ, சத்தியநாதன் எல்லா உபத்திரவங்களையும் மேற்கொள்ளவும், சோதனைகளை ஜெயிக்கவும் பெலன் கொடுத்தார்.

## திருமண வாழ்க்கை :

திரு. சத்தியநாதன் ஆசிரியராக CMS நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டியிருந்த போது அருள்திரு. ஜான் தேவசகாயம் அவரது ஒரே மகளை மனந்தார். அவரது மாமனார் பிரபலமானவர். தென்னிந்தியாவில் சர்ச் ஆப் இங்கிலாந்தின் முதல் சொந்த மிஷனெரி ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் சர்ச் மிஷனெரி சங்கத்தில் (Church missionary society) பணியாற்றினார்.

கிறிஸ்துவின் அன்பு அறியப்படுவதற்கு கர்த்தர் திரு. சத்தியநாதன் மற்றும் திருமதி. சத்தியநாதன் திருமணத்தில் இணைந்தார். அவரது மனைவி அவருக்கு பக்கபலமாக இருந்து 40 ஆண்டு காலம் உறுதுணையாக விளங்கினார்.

1855 ஆம் ஆண்டு திரு. சத்தியநாதன் பயிற்சிக்காக மெட்ராஸ் (சென்னை) க்கு அனுப்பப்பட்டார். பிளாக் டவுன் (Black Town) இருந்து லண்டன் மிஷின் நிறுவனத்தில் முதல் மாணவராகவும், பின்பு டொவீடன் (Doveton) கல்லூரியில் 1857ஆம் ஆண்டு நடைபெற்ற மெட்ரிக் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அங்கு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றமைக்கு கல்லூரியின் விருதை பெற்றார். வெற்றியாளராக திகழ்ந்தார். அவருக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு செயல்பாட்டிலும் சிறப்பாக செய்து முடித்தார். மிகக் குறைந்த காலத்தில் அவர் ஆங்கிலத்தில் புலமை பெற்றார் என்று பல்கலைக்கழத்தில் அவரது படிப்பை தொடரமுடியவில்லை.

## மனைவி :

அன்னா சத்தியநாதன் (அன்னா ஆரோக்கியம் சத்தியநாதன்) அவர்கள் 1832ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி பிறந்தார். இவருடைய தகப்பனார் பெயர் அருள்திரு. ஜான் தேவசகாயம் ஆவார். தாயார் பெயர் முத்தம்மாள் ஆவார். இவர்கள் மயிலாடும்பாறையிலிருந்து திருநெல்வேலிக்கு திருச்சபை ஊழியப்பணிக்காக குடும்பமாய் வந்தவர்கள். இவர் கல்வியாளர், நற்செய்தி பரப்புரையாளர், கிறிஸ்தவ பெண்களை ஒன்றிணைத்து சமூக நற்பணிகளை மேற்கொண்டவர். சென்னையிலும், திருநெல்வேலியிலும் பெண்களுக்கான பள்ளிகளை உருவாக்கி நடத்தியவர்.

## வடநெல்லை ஊழிய பணிகள்:

திரு. சத்தியநாதனின் தேவை வடநெல்லைக்கு தேவையாக இருந்தது. தென்னிந்தியாவில் அறியப்பட வேதநாயகம் மற்றும் கொர்நெலியுவுடனோடு Rev. இராக்லாந்து, Rev. R. R. மெடோஸ், Rev. டேவிட் பென், Rev. வில்லியம் கிரே அவர்களோடு தொடர்பு கொள்ளும் அறிய வாய்ப்பு திரு. சத்தியநாதனுக்கு கிடைத்தது.

திரு. சத்தியநாதன் தன்னுடைய பல்கலைக்கழகப் படிப்பை முடித்துதவுடன் வடதிருநெல்வேலியில் பணிசெய்த இராக்லாண்டோடு இணைந்து நற்செய்திப் பணி செய்ய விரும்பினார். அந்த நாட்களில் இந்தியா முழுவதும் வட நெல்லை ஊழியம் (சுற்றித் திரிந்து நற்செய்தி ஆற்றும் பணி) புதிய ஊழிய முறை மிகவும் பெயர் வாய்ந்ததாக இருந்தது. இதற்கு காரணம் இவர்களிடையே காணப்பட்ட ஜெப சூழ்நிலையே. இவர்களுடைய வாழ்க்கை முறைக்கும், புதிய நறசெய்திப் பணி முறைக்கும் ஜெபமே அஸ்திபாரமாய், இரகசியமாய் இருந்தது. இராக்லாந்து தன்னோடு பணி செய்ய விரும்புகிறவர்களை தெரிந்தெடுப்பதில் மிகவும் கவனமாகயிருந்தார். வடநெல்லை அப்போஸ்தலர்களுடன் திரு. சத்தியநாதன் திறன்பட ஊழியம் செய்தார்.

திரு. சத்தியநாதன் வல்லமையாக ஜெபிப்பதிலும், ஊக்கமாய் இறைப்பணி செய்வதும் அவர்களுக்கு உறுதுணையாகயிருந்தார். குறிப்பாக இராக்லாந்து அவர்களுக்கு நற்செய்தி அறிவிப்பதில் தமிழில் மொழிபெயர்ந்து சொல்லுவதில் உறுதுணையாகயிருந்தார். வடநெல்லை ஊழியத்தில் இராக்லாந்து, மெடோஸ், டேவிட் பென் மற்றும் வில்லியம் கிரே அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக பணி செய்தார்.

## சத்தியநாதனின் ஜெபத்தின் வெற்றி :

Rev. W. நைட் அவர்களது கூற்றுப்படி **'ஜெபம் மகிழ்ச்சியோடு இறைப்பணி செய்வது மிகப்பெரிய இரகசியமாகும்'** இந்த கூற்றுப்படி காலையில் நற்செய்தி பணிக்கு செல்வதற்கு முன்பாக முழங்கால்படியிட்டு அன்றைய சிந்தனைகளை இறை வார்த்தைகளை கோர்வையோடு நற்செய்தி அளிக்கும் பணிக்காகவும், அன்றைக்கு சந்திக்கின்ற மக்களுக்காகவும் ஜெபிப்பார்கள். ஊழிய முடிந்தவுடன் அன்று செய்த எல்லாவற்றையும் கடவுளின் கரத்தில் அர்ப்பணித்து ஜெபிப்பார்கள்.

## திருவில்லிப்புத்தூர் மற்றும் இராஜபாளையம் பகுதி ஊழியம் :

Rev. இராக்லாந்து அவர்களின் மரணத்திற்கு பிறகு 1859ஆம் ஆண்டு திரு. சத்தியநாதன் அவர்களுக்கு திருவில்லிப்புத்தூர் மற்றும் இராஜபாளையம் பகுதியை பொறுப்பெடுத்து நடத்த நியமனம் செய்யப்பட்டார். அதற்கு முந்திய ஆண்டு 1858 ஆம் ஆண்டு அருட்பொழிவு கொடுக்கப்பட்டது.

## சிவகாசி மற்றும் சாட்சியாபுரம் பகுதி ஊழியம் :

1860 ஆம் ஆண்டு முதல் 1863ஆம் ஆண்டு வரை சிவகாசி மற்றும் சாட்சியாபுரம் பகுதியில் நற்செய்தி பணி மற்றும்

குருத்துவப்பணியை செய்து வந்தார். Rev. R. R. மெடோஸ் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக ஊழிய பணியை செய்து வந்தார்.

### சென்னையில் ஊழிய பணி :

1863 ஆம் ஆண்டு CMS மெட்ராஸ் தமிழ் மிஷன் பொறுப்பை திரு. சத்தியநாதனுக்கு கொடுக்கப்பட்டது. திரு. சத்தியநாதன் வாழ்க்கை பயணமானது சென்னையோடு தொடர்புடையது. முதலில் அவர் முழுமையாக ஆயர் பணியாற்றினார். அவர் தன்னுடைய முழு உழைப்பையும் ஆதி திருச்சபையை கட்டுவதற்கு முனைப்பாக செயல்பட்டார். அவர் பொறுப்பேற்ற CMS அமைப்பின் ஜான் பியராரா மற்றும் மவுண்ட் ரோடு திருச்சபையில் வீட்டு வேலை செய்பவர்கள் அதிகமான பேர் இருந்தார். அவர் சென்னையில் பணியாற்றிய 28 வருடத்தை CMS குருசேகரங்கள் சாட்சியாக இருக்கிறது. தென்னிந்தியாவில் முழுவதிலும் செல்வாக்கு மிக்க தேவாலயங்கள் இருந்தன. சொந்த தேவாலயங்கள் திருச்சபைபோல் தேவாலயங்கள் மேம்படுத்துவதே சத்தியநாதன் அவர்களின் நோக்கமாக இருந்தது. இந்தியாவில் முதல் சொந்த தேவாலயம் அமைப்பு (Native Church Council) 1868 இந்தியாவில் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களோடு சத்தியநாதன் அதிக தொடர்பில் இருந்தார். அதன்பின்பு அதற்கு தலைவராக (Chairman) பொறுப்பேற்றார். ஏறக்குறைய 20 வருடங்கள் தலைவராக பணியாற்றினார். என்று மெட்ராஸ் மெயில் குறிப்பிட்டுள்ளது. திரு. சத்தியநாதன் அநேக குருசேகரங்களை நிர்வகித்தார். Arch Bishop of Canterbury செனட் இவருக்கு Fellowship நிலையை கொடுத்துக் கௌரவித்தது.

### இறுதி பயணம்:

1890 ஆம் ஆண்டு சத்தியநாதனின் மனைவி அன்னா சத்தியநாதன் கர்த்தருக்குள் நித்திய வாழ்வில் பிரவேசித்தார். 1891ஆம் ஆண்டு தமிழ் சர்ச் கவுன்சிலின் துணை தலைவராக நியாமிக்கப்பட்டார். அதன்பின் அவர் வெகுகாலம் உயிரோடு இருக்கவில்லை. குடும்ப நிகழ்வுக்காக தனது சொந்த கிராமமான சிந்துப்பூந்துறைக்கு வந்தார். அங்கேயே உடல் நல குறைவினால் 1892 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் தேதி சிந்தபூந்துரையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். பாளையங்கோட்டையிலுள்ள கிறிஸ்து தேவாலயத்தின் கல்லறையில் அவரை நல்லடக்கம் செய்யப்பட்டது.

சத்தியநாதனின் மறைவு குறித்து இரங்கல் செய்தியில் அப்போதைய சென்னை பிஷப் ஃப்ரெடரிக் ஜெல் (Frederick Gell), கிறிஸ்துவுக்குச் சேவை செய்வதிலும், கிறிஸ்துவின் மகிமையை மேம்படுத்துவதிலும், அவரை அவரது சகோதரர்கள் மத்தியில் மிகச் சிறந்தவராக ஆக்கியது. நமது பூர்வீகத் திருச்சபையின் விவகாரங்களில் அக்கறை கொண்ட அனைவரது நேர்மையான மதிப்பையும் வில்லியம் தாமஸ் சத்தியநாதன் பெற்றார். நான் அவரது இழப்பால் மிகவும் துயருறுகிறேன். அவரது இழப்பு மறைமாவட்டம் முழுவதும் உணரப்படும்.' என்று குறிப்பிட்டிருந்தார்.

# வாழ்த்துச்செய்தி





ஐந்தாவது ஆண்டு கொண்டாட்டத்தைக் கொண்டாடும் 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' இதழுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும். இதழின் கிறிஸ்தவ வரலாற்றுப் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள். **டாக்டர் C.T.கிருபா**

ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் இதழுக்கு எங்கள் பாராட்டுகளும், வாழ்த்துக்களும், சேலம் வரலாற்றுச் சங்கத்தினரிடமிருந்து தெரிவிக்கப்படுகிறது. வரலாற்றைப் பாதுகாப்பது மட்டுமன்றி, அதை பாரெங்கும் பறைச் சாற்றும் மகோன்னத பணிகளை பாராட்டாமல் இருப்போமோ நாம்! சேலத்திலிருந்து உங்களுக்கான குரலொலியும்,தோள்வலியும், கைக்கோர்ப்பும் நாங்கள்...



**ஜே பர்னபாஸ்**
**பொதுச் செயலாளர்**
**சேலம் வரலாற்றுச் சங்கம்**

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்



முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி
+91 73971 56808

வேலம்மா தான் மடிச்சிமதில் என்ற ஊரிலிருந்த கோவில் பெண். அந்தச் சுற்று வட்டாரத்து ஆண்களின் பொதுச் சொத்து. யாரும் எப்போதும் அவளை மனைவியாக எடுத்துக்கொள்ளலாம் வயது இருபதுக்கு மேல் இராது. ஒப்பனையே தேவைப்படாத அழகான தோற்றம். பத்து வயதில் அவ்வூர் மாரியம்மன் கோவிலுக்குப் பொட்டுக்கட்டி விடப்பட்டவள். பிறந்து எட்டு வயது முடியும்முன் அவளது தகப்பன், வியாதிபட்டு விழுந்தான். எந்த கைமருந்துகளும் கைக்கொடுக்காததால். கடைசியாக மந்திரிக்க வந்த அந்தவூர் பூசாரி, 'சாமி குத்தமா இருக்கலாம்' என்று முணுமுணுக்க. கணவனை இழந்தால் கைக்கொடுப்பார் யார்? தன்னோடு தன் ஒரே மகளும் தகப்பனை இழந்து தவித்துவிடக் கூடாதென்ற தவிப்பில் செய்வதறியாமல் பூசாரியின் மாயஆலோசனைக்கு மகளை மாரியம்மன் கோவிலுக்குப் பொட்டுக்கட்டி விடுவதென நேர்ந்து கொண்டாள் வள்ளி.

ஊரரிய இரண்டு மாதங்களாக அந்தக் கோவிலைச் சுற்றி சுற்றி வந்து வேண்டுதல் செய்தாள்; பயனில்லை. கணவன் கடைசி மூச்சைத் தனது மகளைப் பார்த்தபடியே விட்டு ஓய்ந்தான். புருசனை இழந்தபின் தனது மகளைக் கோவிலுக்கு அளிக்க வள்ளியின் மனம் ஒப்புக் கொள்ளவில்லை.

'இங்கபாரு வள்ளி, ஏற்கெனவே நம்ம குடும்பத்துல சாமி குத்தம் தொடர்ந்துட்டு வருதுன்னு பூசாரி மட்டுமில்ல அசலூரு சோசிய காரனும் உன் சின்ன மாமங்காரங்கிட்ட ஓயாமல் சொல்லிட்டு இருக்கான். நீ கோயிலுக்குன்னு நேர்ந்துட்டு, இப்ப இப்படி மாண்டேன்னு சொன்னா, அந்த ஆத்தா நம்மளை சும்மா விட மாட்டா. அடுத்த ஆடியில இவளுக்குப் பத்து வயசு. பேசாம கொண்டு போய் கோயில்ல விட்டுட்டு வந்துரு ஆமா. .' என்றாள் அழுக்குப் படிந்து நீண்டு விரிந்து கிடந்த கேசத்தை அள்ளி கொண்டையாக்கினாள் வள்ளியின் மாமியார் சுப்பாத்தாள்.

'என் புருசனை ஆத்தா காப்பாத்தி தந்திருந்தாவிடலாம். அவியளைதான் காலனுக்குத் தூக்கிக் கொடுத்துட்டாளே. பெறவு இப்போ என் மகளையும் கொடுத்துட்டு நான் யாருமில்லாம அனாதையா சாவதா?' என்ற வள்ளி முகத்தில் அடித்துக்கொண்டு 'ஓ. . . ஓஓ. .' என்று அலறியபடியே தன் மகளை இழுத்து அணைத்துக் கொண்டாள். 'அழாதம்மா. . . நான் போகமாட்டேன். உங்கூடவே தான் இருப்பேன். . . ' என்றாள் அந்தச் சின்றஞ்சிறு மகள் வேலம்மாள். தன் பிஞ்சு கைகளால் தாயின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

'என்னது…! ரெண்டுபேரும் ரொம்பதான் கொழையிதீய. ஒலகத்துல இல்லாத புள்ளைய பெத்துட்டா இவா. இந்த தருதல பொறநததில இருந்து இன்னைக்கு வரைக்கும் தரித்திரந்தான். இந்த



ஏழெட்டு வருசமா உன் வயத்துல வேற புழு பூச்சி தங்குச்சாளா. ? உசுரு வாசல இந்த முண்ட வெளிய வரும்போதே அடைச்சிட்டு வந்துட்டா. இன்னைக்கு எம் புள்ளையயும் கொன்னுட்டு நிற்கா... இவளை கொண்டு போய் ஆத்தா கோயில்ல விடலன்னா... இரண்டு பேரும் ஒன்னா கண்காணாத இடத்துக்கு போய் செத்து தொலையுங்க.

ஆமா, எவ்வீட்டுல இனி இருக்கப்புடாது சொல்லிட்டேன். 'என்றவள் விருவிருவென்று எழுந்து பூசாரியைப் பார்க்கக் கிளம்பினாள். 'வயிற்றிலும் தலையிலும் அடித்து அடித்து அழுதாள் வள்ளி. வேதனை ஒப்பாரியாய் நீண்டது. 'அப்பா. . . ஏன் எங்களை உட்டுட்டு போனே..?' என்று முற்றத்து மண்ணை வாரி தன் மேலேயே போட்டபடி கூச்சலிட்டாள் வேலம்மாள். அலரலும் ஒப்பாரி சத்தமும் கேட்டு அந்தத் தெருவில் எல்லோரும் வள்ளியின் வீட்டுமுன் கூடிவிட்டனர்.

வேடிக்கைப் பார்த்தவர்களில் விதியை நொந்து கொண்ட ஒரு சிலரும், வேறெதாவது சொன்னால் சாமி குற்றமாகித் தங்களுக்கும் இதே நிலையாகிவிடக் கூடாதென்ற அச்சத்தில் வாய்த் திறவாமலும் நின்றிருந்தனர். அதற்குள் பூசாரியோடு வந்து சேர்ந்தாள் சுப்பாத்தாள். பூசாரிக்கு முற்றத்தில் உயர்ந்த வட்டவடிவ மரக்கட்டை ஒன்று போடப்பட்டது. அதில் அவர் அமர்ந்தார். சுற்றி எல்லோரும் நின்றிருந்தனர். பூசாரி வந்த செய்தி ஊர்முழுக்கப் பரவியதில் ஊரார் அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

'தாயி. . . கவலை படாதம்மா. புருசனை இழந்தவளுக்கு எதையுஞ்சொல்லி ஆறுதல் படுத்தவே முடியாதுன்னு எனக்குந்தெரியும்!' என்று பக்குவமாய் ஆரம்பித்தார் பூசாரி. ஐம்பது வயது தாண்டியிருக்கும் அவருக்கு. அழுக்குப் படாத வேட்டியும் கழுத்தில் ஒரு நீண்ட துணியையும் சுற்றியிருந்தார். அதன் ஒரு பக்கம் முதுகிலும் மறுபக்கம் வயிற்றின் பெரும்பகுதியையும் மறைத்தபடி கிடந்தது. வள்ளியின் அழுகைமட்டும் அடங்க முடியாமல் ஏங்கி கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் அவளது ஏங்கலின் சத்தம் மட்டுமே 'ம்ம். . . ம். . . ம்ம். . . ' என்று சோக ராகமாய் விட்டு விட்டு கேட்டுக் கொண்டிருந்தது. இரண்டு நிமிட பேரமைதிக்குப் பின்னர் பூசாரி தொடர்ந்தார்.

'எம்மா கொஞ்சம் நினைச்சி பாரு. இந்த ஊருல, இந்த இரண்டுமூணு வருசமா எத்தன சாவு மாறிமாறி விழுந்து போச்சுன்னு. ஆறு வயசு, அஞ்சு வயசு சின்னஞ்சிருசுகளில இருந்து வயசு புள்ளைங்க வரை பத்துப் பதினைஞ்சி பேரு வருசையா செத்துட்டிருக்குதுங்க. உன் புருசன் தங்கமானவன்னு ஊருக்கே தெரியும். இருந்தும் அவனும் இப்படி போவான்னு நெனைக்கல யாரும். இந்த வருசம் பருவமழையும் இல்ல. கொக்கு குடிக்ககூட கொளத்துல தண்ணி கிடையாது. இதெல்லாம் இந்த ஆத்தாவோட சாபமுன்னு எனக்கு பட்டுட்டிருக்கு. அதுவும் உங்க குடும்பத்திலேயே பாரு' உன் பெரிய மாமன் வீட்டுல இரண்டு, சித்தப்பன் வீட்டுல இரண்டு பேரு, உங்க ஆத்தா, மாமியாருன்னு தாலியருத்தவ பட்டியல்' இந்த நாலஞ்சி வருசத்தில எத்தனைன்னு நெனைச்சிப் பாரு.!' என்றவர் வாய்க்குள்ளிருந்த வெற்றிலையை மென்று பின்பக்கம் திரும்பி புளிச்சென்று துப்பி விட்டு, இடது கையால், நாடியில் வடிந்த எச்சிலைத் துடைத்து வயிற்றில் புரண்ட துணியில் துடைத்துக்கொண்டார்.

'இன்னுஞ்சொல்லப் போனா உனக்கு பொறந்ததும் பொட்டையா போச்சு. இனிமே இவ வாழ்கையும் எப்படி இருக்குமோன்னு அந்த ஆத்தாதான் அறிவா' என்றதும் 'ஓஓ... ஓஓஓ...' என்று மீண்டும் அலறினாள் வள்ளி. வேலம்மாவும் தாயோடு சேர்ந்து வானத்தை நோக்கியபடி வாய்ப் பிளந்து 'அப்பா' என்று கதறினாள். நின்றிருந்தவர்களுள் ஒருசிலரின் மூக்குறிஞ்சும் சத்தமும் கேட்டது.

'பெண் தாசியைத்தான் ஆத்தா ஆவலோடு எதிர்பார்த்திட்டு இருக்கா. எனக்குத் தெரிஞ்சி இருவது வருசத்துக்கு முன்னாடி முத்துமாரின்னு ஒருத்தி தாசியா இருந்து செத்துப் போன பெறவு, அவ எடத்துல வேற யாரும் வரல. ஆம்பளைங்கதான் தொண்டு செய்குறோம். பொண்ணுக்கு பொண்ணுதானே சரியான துணைம்மா. ? ஆத்தாவை நாம புருஞ்சிக்கணும். அப்போதான் அவா நம்மள புரிஞ்சுகிட்டு நமக்கு அருள் புரிவா. அதுக்காக நான் உன்னை குறை சொல்லல தாயி. எனக்கு சரின்னு பட்டதை சொன்னேன்னு' எல்லோரையும் பார்த்தபடி செவந்து போயிருந்த பற்களை வெளியே தெரியும்படி லேசாக இழித்துவிட்டு, மீண்டும் எச்சிலைத் துப்ப பின்னால் திரும்பினார்.

அப்போது , ஜல் ஜல் என்று மாட்டு வண்டியின் சத்தம் கேட்க வள்ளியைத் தவிர எல்லோருமே திரும்பி பார்த்தனர். மணிக்கட்டிய மாட்டுவண்டி என்றாலே அது அந்த ஊர்த் தலைவன் சண்டியன் கண்ணப்பன் தான். அந்த ஊரிலேயே சொத்து சுகங்களோடு மச்சுப்பாவிய இரண்டு வீடுகளுக்கு சொந்தகாரன். நான்கு ஆண்பிள்ளைகளுக்கும் ஆளுக்கொரு மச்சுவீட்டைக் கட்டிக் கொடுத்து தன் வீட்டைச் சுற்றியே குடிவைத்துத் தன்னை அந்த ஊரில் பெரிய சண்டியனாகக் காட்டிக் கொண்டு திரிபவன். ஊருக்குள் நடக்கும் குற்றம் குறைவுகளுக்கும் இவன்தான் நாட்டாமையும் செய்வான்.

'என்னாச்சு ஊரே வள்ளி ஊட்டு பக்கமா நிக்கிய...!?' என்று கேட்டபடியே கூட்டத்துக்குள் புகுந்து பூசாரியினருகில் வந்து நின்றான் அவன். பூசாரி மரியாதைக்காக எழுந்து நின்றார். தன் பெயரைச் சொல்லாமல் வள்ளி ஊடு என்றதில் சுப்பாத்தாளுக்கு எரிச்சல். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு எழுந்திருக்காமல் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தாள்.

'ஒன்னுமில்ல ஓய்' வேலம்மைய ஆத்தாளுக்கு நேந்திருக்கா வள்ளி. இப்ப புருசனை இழந்த கவலையில மாண்டேங்கிறா... அதான் அவளை ஆறுதல் படுத்திட்டுப் போகலாமுன்னு வந்தேன். எல்லாரும் இப்படி கூடிட்டாவ'என்றார் பூசாரி. 'யோவ் கொஞ்சமாவது யோசிச்சீராவே. இதெல்லாம் ஊரை கூட்டி இப்படி பேசக்கூடிய விசயமா. . . . போங்க போங்க எல்லாரும் ஊட்டப்பாத்து போங்க. 'என்று கத்தினான் கண்ணப்பன். எல்லோரும் வேறெந்தப் பேச்சும் இல்லாமல் மிதியுண்ட கருப்பு நிற எறும்பு கூட்டம் போல் ஆங்காங்கே விலகிச் சென்றனர்.

'வேலம்மாவுக்கு கோயில ஒட்டி ஒடு போட்ட ஒரு சின்ன வீடும், வள்ளிக்கும் அவள் வீட்டண்டையே அதே மாதிரி



வீடொன்றும் கட்டிக் கொடுத்திருவோம். வேலம்மா என்னைக்கும் பூவோடும் பொட்டோடும் அவ காலம் வரைக்கும் ராசாத்தியா வாழட்டும். வள்ளிக்கும் எந்த குறையும் இல்லாம கவனிச்சுக்கிடலாம். என்ன சொல்லுதா சுப்பாத்தா?' என்றான் வள்ளியின் மாமியாரைப் பார்த்தபடி, கண்ணப்பன். வீடு என்றதும் முகம் மலர்ந்து சட்டென திண்ணையிலிருந்து எழுந்து நின்று தலையை ஆட்டியபடி 'ஈஈ. . சரி சரி' என்ற சுப்பாத்தா 'உங்க பெரிய மனசு என்னைக்குமே உங்களைப் பெரிய மனுசனாதான் வச்சிருக்குமையா' என்றாள்.

'எனக்கு எம் புருசன் கட்டுன இந்த ஓலை குடிசையே போதும். வேற எந்த ஊடும் வேண்டாம்' என்றாள் வள்ளி வெடுக்கென்று எரிச்சலோடு. 'என்ன சொன்னா மூதேவி. வந்த லெச்சிமிய வெரட்டி அடிச்சா உன்ன மிதிச்சி தள்ளிருவேன் ஆமா என்றவள்' கண்ணப்பனின் கண்களையே குழைவோடு பார்த்தாள்.

'சரி சரி விடு. எல்லாம் போவ போவ சரியாகிரும். இப்ப அவளை நிம்மதியா விடு சுப்பாத்தா , அவளே புருசனை பறிகொடுத்திட்டு நிக்கா , நீ வேற' என்றான் கண்ணப்பன்.

பூசாரிக்குள், ஆடு நனையுதுன்னு ஓனாய் குடைபிடித்தக் கதை காட்சியாய் விரிய' வாரும் ஓய். . . ஆத்தாட்ட போய் விசாரிப்போம். நம்மகிட்ட என்ன இருக்கு. . எல்லாம் அவள் வச்சபடி ஆகட்டும்' என்று இருவரும் கோவிலை நோக்கி நடந்தனர். 'யம்மோ. . . கவலைப்படாத நான் எப்பவும் உங்கூட. இந்த ஊரிலேயே உன் கண்ணெதிரிலேயே இருந்துக்கிடுதேன்!' என்றாள் கோயிலை எட்டிப் பார்த்துக் கொண்டே வேலம்மாள்.

வள்ளி நிமிர்ந்து மகளைப் பார்த்தாள். பிறகு தொலைவில் தெரிந்த கோவிலையும் பார்த்தாள். பூசாரியும் கண்ணப்பனும் நெறுங்கி கொண்டிருந்தனர், . . கோவிலை. ! ஒதுங்கி நின்ற வண்டியில் பூட்டப்பட்ட காளைகள் இளைப்பாறிக் காத்துக்கொண்டிருந்தன. கெம்பீரமாய். !

**தொடர்வாள் வேலம்மாள்..**


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம்




ந. சூரிய மூர்த்தி,

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,


சென்னைப் பல்கலைக்கழகம் - 05


கருணாமிர்த சாகரம் முதற்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தைக் கண்ணுறும் போதெல்லாம் இடையிடையே தோன்றும் “சங்கீத வித்தியா மகாஜன சங்கம் 2-வது கான்பரென்ஸ் ரிபோர்ட்”, “3-வது கான்பரென்ஸ் ரிப்போர்ட்” என்னும் தொடர்கள் எனக்குள் ஒரு பெரிய ஏக்கத்தையும் ஆர்வத்தையும் தந்துகொண்டேயிருப்பன. தஞ்சையில் சங்கீத வித்யா மகாஜன சங்கம் ஒவ்வொரு முறை கூடிய போதும் அதன் நடவடிக்கைகள் சிறுசிறு வெளியீடுகளாக அச்சடிக்கப்பட்டுள்ள செய்தியை அத்தொடர்கள் உணர்த்தி நிற்கின்றன. அவ்வெளியீடுகள் அடுத்தடுத்த கூட்டங்களுக்கு வந்திருந்தவர்களிடம் கொடுக்கப்பட்டதும் பொதுவெளியில் பலரது பயன்பாட்டிற்காக அனுப்பப்பட்டதும் உண்டு.

அப்படி, மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்திற்கு அவ்வறிக்கை தரப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பெற்ற செய்தியைச் ‘செந்தமிழ்’ இதழ் (தொகுதி – 10, பகுதி -11) ‘புத்தகவரவு’ என்னும் பகுதியில் 1912-ஆம் வருடம் (செப்டம்பர் - அக்டோபர்) புரட்டாசி மாத இதழில் அறிவித்துள்ளது.

"1912ஸூ மேமீ 27உ தஞ்சையிற் கூடிய ஸங்கீதவித்யா மஹாஜன சங்கத்தின் முதலாவது சங்கரிப்பொர்ட்டு வந்தது. அதைப்படித்ததில் நமது புராதன ஸங்கீத வித்யையானது தற்காலத்தில் நிலைகுலைந்து வருவதுகண்டு அது சிதைந்துபடாது பாதுகாக்கக் கருதிச் சங்கீதாபிமானமுள்ள பலகனதனவான்கள் கூடி யொருசங்கஞ் சேர்ந்து ஸங்கீத வித்வான்களைக் கொண்டு அதனபிவிர்த்திக்கு வேண்டுவன செய்து வர எத்தனித்திருப்பதாகத் தெரிவதுடன், ஸங்கீதத்தின் உயர்வு, அதன் உபயோகம், அதன்றற்காலநிலைமை, அதையப்பியசிக்கும் முறை, பாடும்முறை, கேட்கும் முறை, கற்பிக்கும் முறை, முதலிய பல விஷயங்கள் பல ஸங்கீத வித்துவான்களால் உபநியாச ரூபமாகப் படிக்கப்பெற்றுச் சங்கம் செவ்விதின் நடைபெற்றிருப்பதாகவும் தெரிந்து மிகவும் திருப்தியடைகிறோம்.” என்று அமைந்துள்ள பகுதி அந்தகார இருளில் இருப்பவனுக்குக் கிடைத்த கைவிளக்கு போல என்னுள் ஒரு சிறு நம்பிக்கையையும் தந்து வந்தது. ஆனால் அச்சிறு வெளியீடுகளை எப்படியேனும் கண்டறிந்துவிட வேண்டும் என்கிற பேரவா ஆபிரகாம் பண்டிதர் குறித்த ஒவ்வொரு ஆய்வு முயற்சியின்போதும் தொடரும்.

கருணாமிர்த சாகரம் முதற்புத்தகத்தின் நான்காம்


The
Tanjore Sangeetha Vidhya Mahajana Sangam
3rd Quarterly Report
Held on
Saturday, the 19th April 1913.


MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.


தஞ்சை ஸங்கீத வித்யா
மஹாஜன சங்கத்தின்
மூன்றுவது சங்க ரிப்போர்ட்டு
1913-ம் வூ எப்பிரல்மீ 19-ம் தேய்தி
நடந்தேறியது.


4878
XIV. A
40


Published by
Rao Sahib M. Abraham Pandither
Karunanithi Medical Hall,
Tanjore.

THE LAWLEY ELECTRIC PRINTING PRESS, KARUNANITHI MEDICAL HALL, TANJORE.

பாகத்தில் பக். 1141 முதல் 1181 வரை அமைந்துள்ள ஏழாவது கான்பரென்சின் நடவடிக்கைகள் பகுதியைக் கண்டு அக்காலத்தில் அந்த வெளியீட்டு அறிக்கைகள் (பண்டிதரின் நடையில் சொல்வதானால் ரிப்போர்ட்டுகள்) இப்படித்தான் அச்சாகியிருந்திருக்கும் என ஒரு சமாதானமும் என்னுள் நிகழ்வதுண்டு. முதன்முதலில் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் இதழுக்குக் “கண்டறியப்பட்ட பண்டிதரின் வியாசம்” (நவம்பர் 2023) என்னும் கட்டுரையை வழங்கியபோது, அதில் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் அறிக்கைகளைப் "பெறமுடியாமல் போனது பேரிழப்பே" என்று எழுதியிருந்தேன். ஆனால், எனது நீண்டநாள் ஏக்கத்தையும் ஆர்வத்தையும் நிறைவுசெய்யும் வண்ணமும் எனது கூற்றை நானே மறுக்கும்படியும் ஆய்வுத் தேடலில் சங்கீத வித்யா மகாஜன சங்கம் நடத்திய மூன்று கூட்டங்களின் அறிக்கைகள் தற்போது கிடைத்துள்ளன.

ஆபிரகாம் பண்டிதரால் தஞ்சையில் தொடங்கப்பட்ட சங்கீத வித்யா மகாஜன சங்கம் கருணாநிதி சங்கீத மஹாலில் (அவரது இல்லத்திலேயே) நான்கு ஆண்டுகளில் (1912 - 1916) ஏழு முறை சங்கத்தைக் கூட்டி, இசை தொடர்பான ஆராய்ச்சிகளை

முன்னெடுத்து வந்தது அனைவரும் அறிந்ததே. பண்டிதர் தமது கருணாமிர்த சாகரம் முதற்புத்தகம் முதற்பாகத்தின் ஏழாவது தலைப்பில் தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம் குறித்து மிக விரிவாகப் பேசியுள்ளார். சங்கம் கூட்டுவதற்கு நேரிட்ட காரணம், சங்கத்தின் ஆரம்பம், அதன் நோக்கம், அங்கத்தினர்கள், கூட்டங்கள் நடைபெற்ற ஆண்டு, தேதி என எல்லாத் தரவுகளையும் தந்ததோடு, ஆறு கூட்டங்களின் நடவடிக்கைகளையும் தொகுத்துக் கொடுத்துள்ளார்.

இருப்பினும் அத்தரவுகளின் வழியாகச் சங்கத்தின் செயல்பாடுகளைப் பொதுவான நிலையில் அறியக் கூடுகிறதேயன்றி ஒரு கூட்டத்தின் முழுமையான தரவுகளைத் தனிநிலையில் அறிவதற்கில்லை. எனில், அக்கூட்டங்களைக் குறித்து வெளியான சிறு வெளியீடுகளைக் கொண்டே அத்தகவல்களைப் பெற இயலும். அவ்வகையில் தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் இரண்டு, மூன்று, நான்காம் கூடுகைகளின் அறிக்கைகள் அத்தரவுகளை அறியத் தருகின்றன.

## அறிக்கைகளின் அமைப்புமுறை

முதலில் ஆங்கிலத்திலும் பின்பு அதே தகவல்கள் தமிழிலும் என இரண்டு மொழிகளிலும் மிக நேர்த்தியாக அவரது லாலி எலக்ட்ரிக் அச்சுக்கூடத்திலேயே அவை அச்சிடப்பட்டுள்ளன. அவற்றில் சங்கம் நடைபெற்ற தேதி, இடம், கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் புகைப்படம், கலந்துகொண்டவர்களின் பெயர்ப் பட்டியல், சங்கத்தில் ஆலோசனை செய்யப்பட்ட விஷயங்கள், சங்கம் கூடிய நேரம், வாசித்த ஆய்வுக் கட்டுரைகள் என எல்லாத் தகவல்களும் துல்லியமாக இடம்பெற்றுள்ளன. அதிலுள்ள இசை சம்பந்தமான செய்திகள் இசை வல்லார்க்கே விளங்கவும் பயன்தரக்கூடியதும் ஆகும். ஆகையால் இசை சம்பந்தமான செய்திகளினும் குறிப்பிடத்தக்க சில வரலாற்று நிகழ்வுகளை இங்குக் கருதுதல் தகும்.

## மூன்றாவது கான்பரென்சு

1913-ஆம் ஆண்டு ஏப்பிரல் 19 சனிக்கிழமையன்று இது கூடியிருந்தது. ஆபிரகாம் பண்டிதர் உட்பட 37 பேர் கலந்துகொண்டுள்ளனர். காலை 8 மணிக்குக் கூட்டம் ஆரம்பம் செய்யப்பட்டு அவரது பிள்ளைகளால் கடவுள் வாழ்த்தும், இராஜ வாழ்த்தும் ஆங்கிலத்தில் பாடப்பட்டுள்ளன.

ஆனால், உண்மையில் இக்கூட்டம் நடைபெற்றிருக்க வேண்டியது 1912-ஆம் ஆண்டு நவம்பர் மாதமே. இரண்டாம் கூட்டம் 1912, ஆகஸ்டு மாதமே நடைபெற்றிருந்தது. அடுத்த மூன்று மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய மூன்றாவது கூட்டம் ஏழு மாதங்கள் கழித்து 1913 ஏப்பிரல் அன்றுதான் கூடியுள்ளது. அதற்குக் காரணம் இடையில் பண்டிதரின் உடல்நலம் குன்றியதே. இதுபற்றி மூன்றாவது சங்கத்தின் அறிக்கையில், "சங்கத்தின் பிரசிடெண்ட், மகா-௱-௱-ஸ்ரீ ராவ் ஸாஹேப் னி. ஆபிரகாம் பண்டிதரவர்கள் வந்திருந்த வித்வான்களுக்கும் மெம்பர்களுக்கும் வந்தனோபசாரஞ்சொல்லி கடந்த நவம்பர் மாதம் நடக்கவேண்டிய மீட்டிங்கானது காலதாமதமானதற்கு முகாந்திரம் சொன்னார்கள். தனக்கு கண்ணில் சிறிது நோய் நேர்ந்தமையால் சென்னைக்குப்போய் ஒன்றரை மாதமிருக்க வேண்டியதாக நேரிட்டதே அதற்கு காரணம் என்றார்கள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உடல்நலம் குன்றிய நிலையிலும் இசை பற்றிய ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தான் ஆரம்பித்த சங்கத்தைத் தோய்வில்லாமல் நடத்திய பண்டிதரின் உள்ளுரமே இதில் புலப்படுகின்றது.

பண்டிதர் பேசி முடித்ததைத் தொடர்ந்து, வீணை வெங்கடரமணதாஸ் அவர்கள் முதல் சபைக்குச் சேர்மனாகத் தெரிந்துகொள்ளப்பட்டதும், 11 மணிக்கு கூட்டம் முடியும் முன் சங்கத்தின் இரண்டாவது மீற்றிங் 'ரிப்போர்ட்' வந்திருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதும், 2:30 மணிக்கு மறுபடியும் மீற்றிங் ஆரம்பிக்கப்பட்டதும், இக்கூட்டம் முடிந்தவுடன் வந்திருந்தவர்களை வைத்து ஒரு படம் பிடிக்கப்பட்டதும், 6 மணிக்கு அடுத்த கூட்டம் தொடங்கியதும், அடுத்த மீற்றிங்கின் தேதி, விஷயங்கள் முதலியவைகளை சப்-கமிட்டியாருடைய தீர்மானத்துக்கு விடப்பட்டதும், 8 மணிக்கு கூட்டம் முடிந்ததும், இரவு 10 மணி முதல் 12 மணி வரைக்கும் வெங்கடரமணதாஸ் அவர்களால் வீணையில் அற்புதமான கானம் செய்யப்பட்டதும், யாவரும் கேட்டு மகிழ்ந்ததும் என ஒருநாளின் முழு நிகழ்வையும் அவ்வறிக்கை நமக்குத் தருகின்றது. இச்சங்கத்தில் வாசிக்கப்பட்ட வியாசங்கள் நான்காவது கூட்டத்தின் அறிக்கையில் தொடர்வதும் இவண் குறிப்பிடத்தக்கது.

## நான்காவது கான்பரென்சு ரிப்போர்ட்டு

பார்வைக்குக் கிடைத்த மூன்று அறிக்கைகளுள் தனித்துச் சுட்டத்தக்க, இதுவரை யாரும் அறிந்திராத வரலாற்றுப் புதையல் ஒன்றைத் தன்னகத்தே கொண்டு வெளிவந்திருக்கிறது இவ்வறிக்கை. இதன் முகப்பிலேயே அமைந்த அவ்வாச்சரியம் காணும்போதே நம் கண்களை விரிவடையச் செய்கின்றது. அவ்வறிக்கையின் முகப்பிலேயே அச்சிடப்பட்ட, 'சங்கத்தின் நாலாவது மீற்றிங் அல்லது முதலாவது வருஷோற்சவ கொண்டாட்டத்தின் நடவடிக்கைகள்' என்னும் வாசகம்தான் அவ்வாச்சரியம். இதுவரையிலும் தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம் ஏழு கூட்டங்களை நடத்திய செய்தியை மட்டுமே தமிழுலகும் இசையுலகும் அறிந்திருந்தது. ஆனால் நான்காவது கூட்டம் நடந்த 1913, ஆகஸ்டு 9 அன்றே அச்சங்கத்தின் முதலாவது வருஷோற்சவமும் நடந்தேறியுள்ளது. அவ்வரிய குறிப்பை இச்சிறு வெளியீடே பதிவு செய்துள்ளது.

நான்காவது கூட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் (மூன்றாவது கூட்டம் குறித்துக் கூறப்பட்ட) சங்கத்தின் வழமையான நடவடிக்கைகளையே காணமுடிகிறது. சேர்மேனாகத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள், இசை விசாரணைப் பகுதிகள், இரவுக் கச்சேரி முறைகள் எனச் சிற்சில மாற்றங்களைத் தவிர பெரிய மாறுபாடுகள் ஏதும் இல்லை. இப்பகுதிக்குப் பின்னர் இச்சிறு வெளியீட்டிற்குள்ளாகவே, தஞ்சை ஸங்கீத வித்யா மஹாஜன சங்கத்தின் முதலாவது வருஷத்திய ரிபோர்ட் என்னும் தலைப்பில் (பக். 8 - 16) அச்சங்கம் 18 மாதங்களாகச் செயல்பட்ட வரலாற்றோடு பிற தகவல்களையும் உடனளிக்கின்றது.

'வருடத்திற்கு 4 ஜனரல் மீற்றிங்குகள் நடத்தப்படவேண்டும்' என்னும் முனைப்போடு தொடங்கப்பட்ட

இச்சங்கம் ஆபிரகாம் பண்டிதரின் ‘சொற்ப தேக அசௌக்கியத்தால்’ 18 மாதங்களில் (ஒன்றரை ஆண்டு) 3 கூட்டங்களை மட்டுமே நடத்த முடிந்திருக்கின்ற நிலையை கவலையோடு பதிவு செய்துள்ளது. ஒவ்வொரு கூட்டத்தை (ஜெனரல் மீற்றிங்) நடத்தும் முன்பும் அக்கூட்டத்தில் ஆராயப்பட வேண்டிய விஷயங்கள், நடத்தும் நாள் முதலானவற்றைக் குறித்துத் திட்டமிட ஒரு சப்-கமிட்டி மீற்றிங்கும் கூடியுள்ளது. அவ்வகையில் ‘3 ஜெனரல் மீற்றிங்குகளும், 3 சப்-கமிட்டி மீற்றிங்குகளும் மாத்திரம்’ நடந்தேறியுள்ளது.

‘கருணாநிதியின் கிருபா கடாட்சத்தால் இச்சங்கமானது அதின் முதலாவது வருஷ உற்சவத்தைக் கொண்டாடும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறது’ என்று தொடங்கும் அவ்வறிக்கை, அதுவரையிலான சங்கத்தின் பொருட்செலவுகளைப் பண்டிதரே செய்துள்ளார் என்கிற மிகப்பெரிய உண்மையையும் பதிவுசெய்கின்றது. இதை உணர்த்த சங்கத்தினர் பண்டிதர் குறித்து கூறிய சொற்களும் உதவ முன்வந்த செய்தியும் என்றும் மனத்தைவிட்டு நீங்கா நிலையின. மேலும் அது அவர்கள் சங்கத்தின்மீது வைத்திருக்கும் அபிமானத்தையும் காட்டுகிறது.


‘நாளது வரையில் இச்சங்கமானது நமது பிரசிடென்டவர்களின் சொந்தச் செலவிலேயே நடந்தேறி வருகிறது. இதற்காக ஸங்கத்தின் அங்கத்தினர் யாவரும் அவர்களுக்கு நன்றியறிதலான வந்தனம் அளிக்கிறோம். ஆனால் இனிமேலும் அவர்கள் உதவியை நாம் எதிர்பார்ப்பது நியாயமல்ல. ஆகையால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய சப்-கமிட்டி ஒன்று நியமித்திருக்கிறது. கூடிய சீக்கிரம் அதைப்பற்றிய விபரம் தெரிவிக்கப்படும்.

ஹரிகேசவ நல்லூர் பிரம்மஸ்ரீ முத்தையா பாகவதரவர்கள் வருஷத்திற் கொருதடவை தாம் நடத்தும் ஓர் கதையின் வரும்படியை ஸங்கத்திற்கு கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். இதற்காக நாங்கள் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறோம்.

அநேக கனவான்கள் போஷகர்களாகவும் மெம்பர்களாகவும் இருக்கவேண்டுமென்று விரும்பி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.” என்று பண்டிதருக்காகத் துணை நிற்க அக்காலத்தில் வந்த கைகளும் உண்டு. அவ்வகையில் போஷகராயிருப்பதாக வாக்கு கொடுத்தவர்களுள் இராமநாதபுரம் சேதுபதி மகாராஜா, பாப்பாநாட்டு ஜமீன்தார் சாமிநாத விஜயதேவர், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியார் (ஞானியாரடிகள்) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ஒவ்வொரு கூட்டத்திலும் 40 வித்வான்களுக்குக் குறையாமல் கலந்துகொண்டனர் என்று பதிவுசெய்யும் அறிக்கை, கூட்டத்திற்கு வராத, சங்கத்தின் நோக்கம் இன்னதென அறியாமல், பொறுப்புணர்வு இல்லாமல் இருந்தவர்களைப் (பெயர் குறிப்பிடாமல்) பற்றியும் பதிவு செய்துள்ளது.

“இச்சங்கம் ஆரம்பித்த நோக்கமும், அதில் நடக்கும் விஷயங்களும் இன்னவையென்று இன்னும் அநேக வித்வான்களுக்குத் தெரியாமலிருப்பதற்காக விசனிக்கிறோம். விசேஷமாய் இங்கே யிருக்கும் வித்வான்களில் சிலரைக்கொண்டு மேல்விலாஸம் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் இது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அநேக வித்வான்கள் தாங்கள் இதுவரையும் மீற்றிங்குக்கு வராமலிருந்ததுபோல இனி இருக்கமாட்டோம் என்றும், தாங்களே முன்னின்று யாவையும் நடத்துவோம் என்றும் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்”..சிலர் மிகுந்த தேக சிரமத்தையும், பணச்செலவையும் பாராமல் வெகுதூரங்களிலிருந்தும் வந்து ஸபையின் விர்த்திக்காக மிகுந்த ஊக்கம் எடுத்துக்கொள்ளும் விஷயத்தை கவனித்தால் அது இச்சங்கம் மேன்மேலும் விர்த்தியாகுமென்பதற்கு



சங்கீத வித்தியா மகாஜன சங்கம்,
தஞ்சாவூர்.


இரண்டாவது மீட்டிங்கில் நடந்த நடவடிக்கைகள்.

1912-ளு ஆகஸ்டுமீ 31உ

கூடின இடம்:—கருணாநிதி சங்கீத மஹால், தஞ்சாவூர்.

ஆஜரானவர்கள்.

1. மகா-ா-ா-ஸ்ரீ ராவ் சாயேப் M. ஆபிரகாம் பண்டிதரவர்கள், பிரசிடேண்டு.
2. ” சாம்பமூர்த்தி ராயர் அவர்கள், B.A., B.L.
3. ” P. V. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், B.A., B.L.
4. ” P. V. நாகநாத சாஸ்திரிகளவர்கள், B.A., B.L.
5. ” S. வெங்கட சுப்பையர் அவர்கள், B.A., B.L.
6. ” Y. V. சிநிவாச ஐயர் அவர்கள்.
7. ” V. வாமன ராவ் அவர்கள்.
8. ” E. சூரிய நாராயண ஐயர் அவர்கள், B.A., B.L.
9. ” S. இராம சேஷ ஐயர் அவர்கள், B.A., B.L.
10. ” P. V. மகாலிங்க ஐயர் அவர்கள், B.A., B.L.
11. ” பஞ்சாபகேச பாகவதர் அவர்கள், தஞ்சாவூர்.
12. ” அப்பாசாமி ஐயர் அவர்கள், வையைச்சேரி.
13. ” வீணை வெங்கடரமணதாஸ் அவர்கள், சமஸ்தான வித்வான், விஜயநகரம்.
14. ” பழமானேரி சாமிநாத ஐயர் அவர்கள், தஞ்சாவூர்.
15. ” பிரதாப ராமசுவாமி பாகவதர் அவர்கள், பூவனூர், தஞ்சாவூர்.
16. ” வீணை வெங்கடாசல ஐயர் அவர்கள், தஞ்சாவூர்.
17. ” பிடில் நாராயணசாமி ஐயர் அவர்கள், ”
18. ” சப்தரிஷி சாஸ்திரிகள் அவர்கள், ”
19. ” வீணை இராமசுவாமி ஐயர் அவர்கள், ”
20. ” இராதாகிருஷ்ண பாகவதர் அவர்கள், கும்பகோணம்.
21. ” P. S. சுந்தரம் ஐயர் அவர்கள், B.A., L.T., கோயம்புத்தூர்.
22. ” A. P. கணேச ஐயர் அவர்கள், சென்னபட்டணம்.
23. ” S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள், தஞ்சாவூர்.
24. ” வையை சுப்பிரமணிய ஐயர் அவர்கள், தஞ்சாவூர்.



8

தஞ்சை ஸங்கீத வித்யா மஹாஜன சங்கத்தின்
முதலாவது வருஷத்திய ரிபோர்ட்.

1913-ம்ளு ஆகஸ்டுமீ 9-ந்உ.

கருணாநிதியின் கிருபா கடாட்சத்தால் இச்சங்கமானது அதின் முதலாவது வருஷ உற்சவத்தைக் கொண்டாடும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறது. கடவுளுக்கே மகிமை யுண்டாவதாக. யாவருக்கும் மங்கள முண்டாவதாக.

சுமார் 18 மாதங்களுக்குமுன் இச்சங்கத்தை ஆதியில் ஸ்தாபித்தவர்களும் அச்சங்கத்தின் பிரஸிடெண்டுமாகிய ராவ் ஸாஹேப் M. ஆபிரகாம் பண்டிதரவர்களின் வேண்டுகோளால் சென்ற வருஷம் பிப்ரவரிமீ 14-ந்தேதியில் ஒரு மீற்றிங் கருணாநிதி சங்கீத மஹாலில் கூடினது. அதில் எட்டுபேர் ஹாஜராயிருந்தார்கள். அவர்கள் யாரெனில்:—(i) பிரஸிடெண்டவர்கள், (ii) மகா-ா-ா-ஸ்ரீ பஞ்சாபிகேச பாகவதரவர்கள், (iii) மகா-ா-ா-ஸ்ரீ முத்தையா பாகவதரவர்கள், (iv) மகா-ா-ா-ஸ்ரீ கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யரவர்கள், (v) மகா-ா-ா-ஸ்ரீ வையை R. சுப்பிரமணிய ஐய்யரவர்கள், (vi) மகா-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள், (vii) மகா-ா-ா-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், (viii) மகா-ா-ா-ஸ்ரீ A. G. பிச்சைமுத்து அவர்கள்.

அச்சமயம் இந்திய ஸங்கீத அபிவிர்த்தியில் தனக்கிருந்த அவாவைப் பிரஸிடெண்டவர்கள் எடுத்துச் சொன்னதின்பேரில், அதை உத்தேசித்து தென்னிந்தியாவுக்கென்று, “தென்னிந்தியாவின் ஸங்கீத களஞ்சியம்” என்ற பெரும் பெயரை அடைந்த இந்தத் தஞ்சைமாநகரில், “ஸங்கீத வித்யா மஹாஜன ஸங்கம்” ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று நிர்மானிக்கப்பட்டது. அப்படியே பிரஸிடெண்டு, செக்ரிடெரி, ரிஸெப்ஷன் கமிட்டி சேர்மென், ரிஸெப்ஷன் கமிட்டி செக்ரிடெரி முதலியவர்களால் ஆகுன்ன “காரிய நிர்வாக ஸபை” ஒன்று நியமிக்கப்பட்டு, சங்கத்தின் முதலாவது மீற்றிங் 1912-ம்ளு மேமீ 27-ந்உ யன்று இந்த இடத்தில் கூடினது.

ஸங்கத்தின் நோக்கம்.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் எவையெனில்:—

(i) இந்திய ஸங்கீத சாஸ்திர அறிவை விர்த்தி செய்தல்.

(ii) நம் இந்திய ஸங்கீதத்தில் மறைந்து கிடக்கும் ரஹஸ்யங்களைப் பிரசங்கங்கள் மூலமாய்ப் பிரசித்தப்படுத்துதல்.

(iii) பழமையான ஸங்கீத நூல்களையும் உருப்படி முதலியவைகளையும் சேகரித்துப் பிரசுரப்படுத்துதல்.

அத்தாக்ஷியாகிறது.” என்று பேசியிருக்கிறது.

மேலும் அவ்வறிக்கையில், சங்கத்தின் நோக்கம், சங்கத்தின் ஆதரிப்பு, சங்கத்தின் போஷகர்கள், சங்கத்தின் காரிய நிர்வாக சபையார், சங்கத்தின் மீற்றிங்குகள், சங்கத்தில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள், மூன்று கூட்டத்திற்கும் வந்திருந்தவர்களின் பெயர்ப்பட்டியல், மீற்றிங்குகளுக்கு ஹாஜரானவர்கள் முதலான புள்ளிவிவரங்களைப் பதிவு செய்துள்ளார் சங்கத்தின் செக்ரிடெரி A. G. பிச்சைமுத்து.

## இரண்டாவது கான்பரென்சு ரிப்போர்ட்டு

இக்கூட்டத்திலும் வழக்கமான நடவடிக்கைகளே நடைபெற்றிருக்கின்றன என்றாலும் இங்கு இதனைத் தனித்துக் குறிப்பிட வேண்டிய தேவையை வரலாறு கட்டாயப்படுத்துகின்றது. கருணாமிர்த சாகரம் முதல் புத்தகத்தில், தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் (ப. 263) ஏழு கான்பரென்சுகளும் நடந்த தேதிகள் தரப்பட்டுள்ளன. அதில் “இரண்டாவது கான்பிரன்ஸ் கூடிய காலம் 1912-ம் வருஷம் ஆகஸ்டு-மீ 21வ’ என்று இடம்பெற்றுள்ளது. ஆனால் இரண்டாவது கான்பிரன்சு கூடிய காலம் 1912-ம் ஆண்டு ஆகஸ்டு 21 அல்ல. பத்து நாட்களுக்குப் பின்னர் ஆகஸ்டு 31 அன்றுதான் கூடியுள்ளது. நூறாண்டுகளுக்கு முன்னர் ஆயிரம் பக்கங்களுக்கு மேல் அச்சிடப்பட்ட புத்தகத்தில் அச்சுப்பிழை நிகழ்வது இயல்பானதே என்பதால் கருணாமிர்த சாகரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதி அச்சுப்பிழையாக இருக்க வாய்ப்புள்ளது.

இரண்டாவது கான்பரென்சு ரிப்போர்ட்டின் முகப்பில் 1912-ஷு ஆகஸ்டு மீ 31வ என்று தெளிவாக அச்சாகியுள்ளது. முன்னர் கூறப்பட்ட முதலாவது வருஷோற்சவ கொண்டாட்ட ரிபோர்ட்டில் சங்கத்தின் மீற்றிங்குகள் என்னும் பகுதியில் “ஜெனரல் மீற்றிங்குகள் 1912-ம்ஷு மேமீ 27-ம்வயிலும், ஆகஸ்டுமீ 31-ம்வயிலும், 1913-ம்ஷு ஏப்பிரல்மீ 19-ம்தேதியிலும் நடந்தன” என்று மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்ட தேதிகளும் தரப்பட்டுள்ளன. மேலும், அவ்வறிக்கையிலேயே இரண்டாவது மீற்றிங்கிற்கு ஹாஜரானவர்கள் என்று கலந்துகொண்டவர்களின் பெயர்ப் பட்டியலைத் தரும் பகுதியிலும் 1912, ஆகஸ்டு 31 என்கிற தேதியே தரப்பட்டுள்ளது.

இப்படி மூன்று இடங்களில் ஒரே தேதியே பதிவாகி, சங்கத்தின் இரண்டாவது கூட்டம் நடைபெற்ற நாள் 1912, ஆகஸ்டு 31 என்பதை உறுதிப்படுத்துகின்றது. எனில் இத்தனை ஆண்டு காலமாக 1912, ஆகஸ்டு 21 என்று வழங்கிவந்த சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் இரண்டாவது கூடுகை, மேற்காட்டப்பட்ட ஆய்வுத் தரவுகளால் 1912, ஆகஸ்டு 31 என்று துலக்கம் பெறுகின்றது.

இப்படிப் பல எண்ணற்ற அரிய தகவல்களையும் வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்டு வெளிவந்திருக்கின்றன பண்டிதரின் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் ரிப்போர்ட்டுகள். கிடைத்த 3 அறிக்கைகளிலேயே பண்டிதர் பற்றிய வரலாறு விரிவடைகிறது. கூர்மை பெறுகிறது. எனில், மேலும் கிடைக்கவிருக்கும் பொக்கிஷங்களுக்காய்க் காத்திருப்போம்.

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **‘கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்’** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

## ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# என் பாக்கியமான நாள்

மன்னா செல்வகுமார்

இத்தலைப்பின்கீழ் தந்தை பால் கடம்பவனம் அவர்கள் எப்படி கிறிஸ்தவரானார் என்ற காரணத்தைத் அருணோதயம் மாத இதழில் தெரிவிக்கிறார். அது பின்வருமாறு.

'என்னைத் தமது பிள்ளையாக்கினதில் சர்வ வல்லமையுள்ள தேவன் எனக்குப் பாராட்டின அளவற்ற இரக்கத்துக்காக அவருக்கு நன்றி சொல்லுகிறேன். நான் அவருடைய பிள்ளையாக அவரிடத்தில் அனுபவிக்கும் பாக்கியத்தை சொல்ல என் வார்த்தைகள் போதாது.'

1908 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் நாள் என் ஜீவியத்தில் நினைவு கூரத்தக்க முக்கிய நாள். அது என் என்னாயுசு பரியந்தம் எனக்கு அருமையான நாளாயிருக்கும். நான் சைவன், வேளாளர் குலத்தில் பிறந்து சைவாசாரங்களில் வளர்க்கப்பெற்றேன். அக்காலத்தில் எனக்கு நன்றாய்ப் படிக்க வரமளித்தால் அநேக விக்கிரகங்களுக்குத் தேங்காய், பழம் இவற்றைப் படைப்பதாகப் பொருத்தனை செய்து கொள்வதுண்டு.

1901ல் 'என் மாமன் கிறிஸ்தவரானார். அதனால் மார்க்க வைராக்கியமுள்ள எனக்குச் சத்துருவுமானார். அவர் எனக்கு ஒரு புதிய ஏற்பாட்டுப் புஸ்தகம் கொடுத்து அதில் நான் ஒரு சுவிசேஷத்தைப் படித்தால் ஒரு ரூபாய் இனாம் தருவதாகவும் வாக்களித்தார். அதற்கு நான்: உன்னுடைய ரூபாயும் வேண்டாம். அந்தப் புஸ்தகமும் வேண்டாம். அதைக் குப்பைமேட்டில் தூக்கியெறியென்று மூர்க்கமாய்ப் பேசினேன். கிறிஸ்து என்றால் எனக்கு வேம்பும் விஷமுமாயிருந்தது. இருந்தும், என் மாமனாரின் பொறுமையும் பக்தியுமான நடக்கையும், புதுக்கோட்டையில் நான் கண்ட ஒரு தேவபக்தியுள்ள குடும்பத்தின் இயல்பும் என் மனதில் நன்றாய்ப் பதிந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் தேவனை நோக்கிப் பிரார்த்திப்பதுபோல நானும் அநேக இந்து தேவர்களை நோக்கி அதேவிதமாய்ச் ஜெபித்துவந்தேன்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சுவிசேஷத்தில் மலைப்பிரசங்கத்தை எடுத்துவாசித்து அதன் பொருட்சிறப்பால் இழுப்புண்டு என் மார்க்க நூல்களில் அதற்குச் சமமானதைக் காணாமையால் அதை என் தாயாருக்கும் அது கிறிஸ்தவர்களுடைய வேதத்திலிருக்கிறதென்று சொல்லாமல் வாசித்துக் காட்டினேன். அப்பால் இந்து கிறிஸ்தவ மார்க்கங்களைப் பற்றிய பல புஸ்தகங்களைப் படிக்கப்படிக்க இந்து மார்க்கத்தில் எனக்கிருந்த அபிப்பிராயம் போயிற்று. ஒரு நாள் என் மாமனைக்கண்டு, மாமா, வரவர இந்து மார்க்கத்தில் எனக்கிருந்த விசுவாசம் குறைந்து வருகிறது. பைபிளில் அடங்கிய சங்கதிகளைப் பார்த்து வியப்படைகிறேன்.



ஆனால் நான் அதை நம்புகிறதில்லை என்றேன். இதைக்கேட்டு அவர், நீ தேவனைநோக்கி முன் போலவே ஜெபி, பெயரைச் சொல்லாதே. அவர் கிறிஸ்துவோ பிறமத தெய்வங்களோ அதைப்பற்றி உனக்குக் கவலைவேண்டாம். உன்னையும் இந்த உலகத்தையுமுண்டாக்கின அந்த ஒரே ஆண்டவரை நோக்கி அவர் உனக்குச் சத்தியத்தை வெளிப்படுத்தும்படியாகக் கேள் என்று ஆலோசனை சொன்னார். அதன்படியே நான் உட்கருத்தாய்ச் ஜெபித்து வந்தேன். இந்துமார்க்கத்தில் திருப்தியற்றுப்போனேன். அது என்னைச் சன்மார்க்கனாக்கவில்லை. இயேசுகிறிஸ்துவை நேசிக்கத் தலைப்பட்டேன். இக் காலத்தில் எனக்குத் தேவ அழைப்பு உண்டாயிற்று.

நான் கிறிஸ்தவர்களுடைய ஆராதனைக்குப் போனவனல்ல. ஆனால் ஒரு ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டையிலுள்ள லுத்தரன் மிசியோன் கோவிலுக்குப்போய் உள்ளே நுழையலாமோ கூடாதோவென்று மனந்தடுமாறி வெளியே நின்றேன். ஆராதனை துவக்குகையில் உள்ளே நுழையலாமென்று நினைத்தேன். அப்போது சங்கை. D. பெக்சல் என்ற போதகர் பிரசங்கபீடமேறி ஆதி.24,31 ல் உள்ள 'கர்த்தரால் ஆசிர்வதிக்கப்பட்டவனே, உள்ளே வா, நீ

வெளியே நிற்பானேன், நான் வீட்டையும் ஒட்டகங்களுக்கு இடத்தையும் ஆயத்தம் பண்ணினேன்" என்கிற வாக்கியத்தை வாசித்தார். இதைக்கேட்டவுடன் ஒரு பெரிய மாறுதல் என்னிருதயத்தில் உண்டாயிற்று. என் மனதில் கிறிஸ்துவின் பொருட்டு என் வீட்டையும் அதிலுமதிகமாய் என் தாயையும் விடமுடியாதிருக்கிறதே என்கிற எண்ணத்தால் பெரிய குழப்பமுண்டாயிற்று.

பிறகு பாவமில்லாத இயேசுவின் மூலமாய்த்தான் இரக்ஷிப்பின் வழி இருக்கிறதைப்பற்றி நான் நிச்சயித்துக் கொண்டிருப்பதை என் தாய்க்குப் பயந்து பயந்து வெளியிட்டேன். கோபமும் அடிகளுந்தான் கிடைத்த பதில். இது நடந்து சிலவாரங்களுக்குப் பிற்பாடு விநாயக சதுர்த்தி வந்தது. அப்போது களி மண்ணால் செய்த விநாயகனைக் கும்பிடச் சொன்னார்கள். நான் மாட்டேன் என்றேன். என் தாயும் சகோதரிகளும் வாய்க்குவந்த படி வைதார்கள். நான் சொல்ல முடியாத துக்கத்தால் நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து, சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, நான் இந்த மண்ணாற் செய்த விநாயகனைக் கும்பிடுகிறதில்லை. உமக்கு முன்பாக நான் சாஷ்டாங்க தெண்டனிடுகிறேன் என்றேன்.

என்னோடு நெருங்கிப் பழகின எல்லோரும் என் மன மாறுதலைக் கவனித்து என்னையும் என் புதுமார்க்கத்தையும் பழித்தார்கள். நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது என் வேதாகமத்தைக்கூடக் கொண்டுபோவேன். பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியபின் ஒரு அறைக்குள் என்னை அடைத்துக்கொண்டு சத்தமாய் வாசித்து ஜெபம்பண்ணுவேன். ஒருநாள் புதுக்கோட்டைக் அருகான காட்டுக்குப்போய்ச் சத்தமாய்ச் ஜெபித்து வீட்டுக்குத் திரும்பினேன். இது என் தாய்க்குத் தெரிந்தது. அவர்கள் என் கிறிஸ்தவ புஸ்தகங்களையெல்லாம் எடுத்து ஒளித்து விட்டு, எனக்கு விஷம் வைத்து என்னைக் கொல்வதாயும் பயமுறுத்தினார்கள்.

அப்பால் நான் ஞானஸ்நானம்பெற வாஞ்சித்துச் சென்னைப்பட்டணம் புறப்பட்டுப்போனேன். என் தாய் என்னைத் தேடிவந்து திரும்ப ஊருக்கு அழைத்துப்போனார்கள். வீட்டுக்கு வந்தபின் நான் வெளியேபோக எனக்கு இடங்கொடாமல் என் பந்துக்கள் எனக்குக் காவலாயிருந்தார்கள். அடிகளும் தூஷணமும் அடிக்கடி எனக்குக் குறைவில்லாமல் கிடைத்தது. ஆயினும் நான் ஞானஸ்நானம்பெற அதிகமாய் வாஞ்சித்ததினால் ஒரிரவு நடுச்சாமத்தில் நிலாவெளிச்சத்தில் நான் என் வீட்டை விட்டுப்புறப்பட்டு தஞ்சாவூருக்கு வந்து, ரெயிலேறிச் சென்னை போய்ச் சேர்ந்தேன். கடவுளைத் தவிர நான் போனது ஒருவருக்குந் தெரியாது. வெற்றுக்கையனாய்க் கிறிஸ்துவின் சிலுவையை நம்பிப் புறப்பட்டேன்.

சென்னையில் 1908 ஆண்டு ஏப்ரல் மாதம் 5 நாள் ஞாயிற்றுக்கிழமை என்னருமை இரக்ஷகராகிய இயேசுகிறிஸ்துவை யாவருமறிய என்சொந்த இரக்ஷகர் என்று ஞானஸ்நானத்தால் ஏற்றுக் கொண்டேன். நான் கிறிஸ்தவனாகி இப்போது இரண்டு வருஷமாகிறது.

என் பிரியநேசரே! இந்த நாள் என் ஜீவியத்தின் பாக்கியமானநாள் அல்லவா? இந்த நாளில் என் எல்லாக்கேள்விகளும் மார்க்க ஆட்சேபனைகளும் என்னைவிட்டு ஒழிந்தன. என்னாத்துமாவைப்பற்றிய



எனக்கிருந்த பெருங்கவலை முடிவுபெற்றது. அந்த நாளில் நான் அடிமைத்தனத்துக்கு நீங்கிச் சுயாதீனம் பெற்று உத்தம தேவபிள்ளையானேன். என் ஜீவியத்தில் அதற்கு முன் நடவாத விலையேறப்பெற்ற விசேஷத்தால் பரிசுத்தமான அந்தநாள் எனக்கருமையான நாளே. அதில் புது விசுவாசமும் புது நம்பிக்கையுமுள்ளவனாய் மகிமையான ஒரு புது ஜீவியம் பண்ணத்துவக்கினேன்.

ஓ! கிறிஸ்தவரல்லாத என்னண்பரே! என் இருதயம் இயேசுகிறிஸ்துவிலுள்ள சந்தோஷத்தால் நிறைந்திருக்கிறது. 24 மாதங்களுக்குமுன் நான் கிறிஸ்தவனல்லாதவனும், பல பூதங்களை வணங்குகிறவனும், நியாயவிரோதமான அநேக கொள்கைகளைப் பின்பற்றினவனுமாயிருந்தேன். இப்போதோ நான் ஞான தீக்ஷைபெற்ற கிறிஸ்தவன். 24 மாதங்களுக்கு முன் நிர்ப்பாக்கியரிலும் நிர்ப்பாக்கியனாயிருந்த நான் இப்போது பாக்கியரிலும் பாக்கியன்.

ஆ! என்ன மாறுதல்! இது எப்படி நடந்தது. கடந்து போன காரியங்களின் ஞாபகம் எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. கிறிஸ்துவைக் கண்டடைந்தபின், நான் முன்னிருந்ததைவிடப் பதினாயிரம்மடங்கு பாக்கியசாலியாயிருக்கக் காண்கிறேன். அவர் என்னைப் போதுமானபடி ஆசிர்வதித்திருக்கிறார். நான் திருப்தியுற்றிருக்கிறேன். அக்காலத்தில் என் பழையமார்க்கமும் அதின் புஸ்தகங்களுமெல்லாம் கொடுக்கக்கூடாத ஏதோ வொருபொருளின்மேல் தேட்டமுற்று என்னாத்துமா பசித்திருந்தது. அது என்னவென்று அப்போது எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போதோ அப்பொருள் கிறிஸ்துவே அல்லாமல் வேறொன்றல்லவென்று கண்டுகொண்டேன்' என்பதே.



# தெற்கு பாப்பாங்குளம் தூய. பவுல் தேவாலய திருச்சபை வரலாறு





ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் கல்லிடைக்குறிச்சிக்கும் மணிமுத்தாறுக்கும் இடையில் அமைந்துள்ள ஓர் கிராமம் தெற்கு பாப்பாங்குளம். தெற்கு பாப்பாங்குளம் கிராம பஞ்சாயத்து 5,497 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இந்த கிராம பஞ்சாயத்தில் 693 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இந்த கிராம பஞ்சாயத்தில் வாழும் பொதுமக்கள் 2554, அதில் ஆண்கள் 1241, பெண்கள் 1313.

### தெற்கு பாப்பாங்குளம் - பெயர் காரணம்

அம்பாசமுத்திரம் தாலுகாவில் இடைகாலுக்கும் - பொட்டல்புதூருக்கும் இடையில் பாப்பான்குளம் என்றொரு பெருங்கிராமம் இருப்பதால் இக்கிராமத்தை தனியே அடையாளம் காட்டும்படியாக தெற்கு பாப்பான்குளம் என இக்கிராமம் அழைக்கப்படுகிறது. தொடக்ககாலத்தில் பிராமண சமூகத்தினர் பார்ப்பனர் எனப்பட்டனர். அவர்கள் இங்கு குழுவாக வாழ்ந்துள்ளனர். அவர்களது குடியிருப்பையொட்டி பாசன வசதிக்காக குளம் இருந்தது. குளத்தை ஒட்டி ஏற்பட்ட குடியிருப்பு பார்ப்பான்குளம் என அழைக்கப்பட்டது. பார்ப்பான்குளம் எனப்பட்ட இக்கிராமப்பெயர் காலப்போக்கில் மருவி பாப்பான்குளம் என்ற பெயரை பெற்றுள்ளது.

### தெற்கு பாப்பாங்குளம் கிராம சமூக சூழல்

இக்கிராமத்தின் தென்பகுதியில் மறவர், வடபகுதியில் நாடார், கீழ்பகுதியில் ஆதிதிராவிடர் என மூன்று சமூகத்தினர் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் சிங்கம்பட்டி ஜமீன்தாரின் அனுமதியோடு 1800 க்குப் பின் குடியேறியுள்ளனர். குடிகாவல் பணிக்காக மறவர்கள், பனையேற்றுத் தொழிலுக்காக நாடார்கள், விவசாயப் பணிகளுக்காக ஆதிதிராவிடர்கள் இங்கு குடியேறியுள்ளனர். பிற இரு சமூகத்தினரைக் காட்டிலும் அதிக அளவில் இங்கு மறவர் வசிக்கின்றனர். இக்கிராமம் ஆங்கிலேயராட்சியில் சிங்கம்பட்டி ஜமீன்தாரின் ஆளுகையின் கீழ் இருந்தது. மேற்கு தொடர்ச்சி மலையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஜமீன்தாருக்கு இருந்தது. போரில் தங்களுக்கு படை கொடுத்து உதவியமைக்கு நன்றிக்கடையாளமாக திருவாங்கூர் சமஸ்தான அரசரால் அவை ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்டவை.

### சிங்கம்பட்டி ஜமீன்தாரின் அழைப்பும் தெற்கு பாப்பாங்குளத்தில் நாடார்கள் குடியேற்றமும்

கல்லிடைக்குறிச்சி ரயில்நிலையம், ரயில்வே பாதை மற்றும் ரயில்வே பாதையின் தென்புறம் முதல் மேற்கு தொடர்ச்சி மலை வரை அனைத்தும் சிங்கம்பட்டி ஜமீனுக்கு சொந்தமான நிலங்கள் ஆக இருந்தது சிங்கம்பட்டி ஜமீன்தார் ஆங்கிலேய அரசில் சுயாதீன உரிமை பெற்ற குறுநில அரசராயிருந்தார்.

ஜமீன்எல்கைக்குட்பட்டதெற்குபாப்பான்குளத்தையொட்டி ஏராளமான பனைமரங்கள் இருந்தது செழிப்பான இருபோக விவசாயநிலங்களும் இருந்தது. சிங்கம்பட்டி ஜமீனுக்குட்பட்ட தெற்குபாப்பான்குளம் பனைகளில் பனையேற்றுத்தொழில் செய்ய ஜமீன்தாரின் அழைப்பின் பேரில் கல்லிடைக்குறிச்சி மேல்முகம்நாடார்தெரு நாடார்களில் ஓர் குடும்பத்தினர் தெற்கு பாப்பான்குளத்தில் குடியேறினர். இவர்கள் தற்போது CSI கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் பகுதியின் தெற்கே குடியேறினர்.

### தெற்கு பாப்பாங்குளம் கிராமத்தில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்

1890 க்கும் 1898 க்கும் இடையில் சுடலைமாடசாமியைக் குலதெய்வமாக வழிபட்ட இக்கிராம நாடார்

சமூக பெரியவர் முதன்முதலாக சுவிசேஷமுத்து என்ற அடையாளப்பெயருடன் ஞானஸ்நானம் பெற்றார். அவருக்கு நற்செய்தி கல்லிடைக்குறிச்சி சபை ஊழியர் திரு. அ. ஈசாக்கு உபதேசியார் மூலம் சொல்லப்பட்டிருந்தது. கல்லிடைக்குறிச்சி மேல்முகம்நாடார்தெரு கிறிஸ்தவர்கள் பதநீர் சீசன் காலங்களில் தெற்குபாப்பான்குளம் கிராமத்தின் தென்புறம் இருந்த பனைமரக்காடுகளில் தங்கியிருந்து பனையேற்றுத்தொழில் செய்வார்கள் அவர்களுக்காக ஆராதனை நடத்த கல்லிடைக்குறிச்சி சபை ஊழியர் ஈசாக்கு உபதேசியார் நடந்தவாரே தெற்குபாப்பான்குளம் நாடார் தெருவைக் கடந்து அங்கு செல்வது வழக்கமாயிருந்தது. அந்நேரம் தெற்கு பாப்பாங்குளம் நாடார் தெருவின் முக்கியஸ்தராக இருந்த பெரியவருக்கும் ஈசாக்கு உபதேசியாருக்கும் நல்ல அறிமுகம் ஏற்பட்டது.



### தெற்கு பாப்பாங்குளம் பெரியவரும் ஈசாக்கு உபதேசியாரும்

தெற்கு பாப்பாங்குளம் பெரியவர் கல்லிடைக்குறிச்சி மேல்முகம்நாடார் தெருவைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவருக்கு மாடத்தி எனும் மூத்தமகள் உட்பட 2 மகள், வெள்ளையா நாடார், முத்துக்கண் நாடார் எனும் மகன்கள் உட்பட 7 ஆண் குழந்தைகள் ஆக 9 குழந்தைகள். 1873 இல் கல்லிடைக்குறிச்சி சபை ஊழியராகப் பொறுப்பேற்றவர் மருதகுளத்தைச் சேர்ந்த ஈசாக்கு உபதேசியார். கனம். சார்லஸ் ரேனியஸ் ஐயரவர்கள்தலைமையிலான டோனாவூர் மிஷனரிகள் மற்றும் உபதேசியார்கள் கல்லிடைக்குறிச்சி மேல்முகம்நாடார் தெருவில் 1849, 1850 இல் செய்த சுவிசேஷ ஊழியத்தை ஏற்று சுவிசேஷமுத்து என ஞானஸ்நானம் பெற்றிருந்த இ. அய்யம்பெருமாள் நாடாரின் மூத்தமகள் ஞானவடிவுவை இவர் திருமணம் செய்திருந்தார். இவரது மனைவி ஞானவடிவுக்கு தெற்கு பாப்பாங்குளம் பெரியவர் நெருங்கிய உறவினர் ஆக இருந்தார்.

### சபை வரலாறு நேரடிக்கள ஆய்வு

2004 ல் தெற்கு பாப்பாங்குளம் சபை வரலாறு குறித்த நேரடிக் கள ஆய்வின்போது தெற்குபாப்பான்குளம் முதல் கிறிஸ்தவரான சுவிசேஷமுத்துவின் கடைசி மகனாகிய முத்துக்கண் நாடாரின் மகன் திரு. மு. தர்மக்கண் உயிரோடிருந்தார்கள் அவர் கீழ்க்கண்ட வரலாற்று செய்தியைக் குறிப்பிடுகிறார்கள் 'கல்லிடைக்குறிச்சி மேல்முகம்நாடார் தெருவில் வசித்த தம் தாத்தாவை சிங்கம்பட்டி ஜமீன்தார் தம் ஜமீன் எல்கைக்குட்பட்ட தெற்குபாப்பான்குளத்தில் குடியேறி பனையேற்றுத்தொழில் செய்ய அழைப்புவிடுத்ததாகவும் அதன்படி அவர் குடியேறியதாகவும் அவர் வந்தவுடன் தாம் குலதெய்வமாக வழிபட்டுவந்த சுடலைமாடசாமிக்கு தெற்குபாப்பான்குளத்தில் குலதெய்வகோயில் அமைத்து அதை வழிபட்டதாகவும் அக்காலத்தில் கல்லிடைக்குறிச்சி சபை ஊழியர் ஆக இருந்த திரு. அ. ஈசாக்கு உபதேசியார் மூலம் நற்செய்தியை ஏற்று தெற்கு பாப்பாங்குளம் நாடார் தெருவில் சுவிசேஷமுத்து என்ற பெயருடன் தம் தாத்தா ஞானஸ்நானம் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் கல்லிடைக்குறிச்சி தேவாலயப் பிரதிஷ்டை (01. 03. 1910) வரை தம் முன்னோர் கல்லிடைக்குறிச்சிக்கு சென்று ஞாயிறு தேவாலய வழிபாட்டில் பங்கேற்றதாகக் குறிப்பிட்டார். '

### சுவிசேஷமுத்து எனும் அடையாளப் பெயர்

அக்காலத்தில் ஓரிடத்தில் முதன்முதலாக கிறிஸ்தவத்தை ஏற்று ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு சுவிசேஷமுத்து எனும் பெயரை சூட்டுவது வழக்கமாக இருந்தது. கல்லிடைக்குறிச்சி மேல் முகம் நாடார் தெருவில் முதன்முதலாக கிறிஸ்தவத்தை ஏற்ற மா. இசக்கிமுத்துநாடார் - வடிவு தம்பதியரின் மூத்த மகன் அய்யம்பெருமாளுக்கு சுவிசேஷமுத்து எனும் அடையாளப் பெயர் பெயர் 1850 இல் கொடுக்கப்பட்டிருந்தது கனம். சார்லஸ் ரேனியஸ் ஐயரவர்கள் காலத்தில் இந்த ஞானஸ்நானம் கல்லிடைக்குறிச்சியில் நடைபெற்றது. பின்னர் கல்லிடைக்குறிச்சி மேல் முகம் நாடார் தெருவின் மத்தியில் CMS மூலம் இடம் வாங்கப்பட்டு அங்கு கிழ மேலாக தேவாலயம் அக்காலத்தில் கட்டப்பட்டிருந்தது அதுவே அங்கு CMS தொடக்கப்பள்ளியாகவும் செயல்பட்டு வந்தது (இன்றைய TDTA).

### தெற்கு பாப்பான்குளம் மற்றும் துவரைக்குளம் இடையேயான தொடர்பு

தெற்கு பாப்பான்குளம் சபை சார்ந்த நேரடிக்கள ஆய்வில் கிடைத்த பாரம்பரிய செவிவழிச்செய்தியில் துவரைக்குளம் கிராமத்தோடு தங்களுக்கு ஆதிகாலஉறவு இருந்ததாகவும் அங்கிருந்து 9 பேர் கல்லிடைக்குறிச்சியில் குடியேறியதாகவும் அதில் ஒருவர் பாப்பாங்குளத்திற்கும் மற்றொருவர் சிங்கம்பட்டிக்கும் சென்றதாகவும் தாம் செவிவழிச் செய்தியாக அறிந்ததாக 84 வயதான திரு. சுப்பையா என்ற ஆபிரகாம் சுந்தர்ராஜ் 2020 இல் நேரடிக்கள ஆய்வு- நேரடிப் பேட்டியின்போது குறிப்பிடுகிறார். இவர் திரு. வெள்ளையா என்ற மாசில்லாமணியின் மனைவி கிருபையின் உடன்பிறந்த தங்கையின் பேரன் ஆவார்.

### தெற்கு பாப்பாங்குளமும் கார் மிஷனரியும்

தெற்குபாப்பான்குளத்தில் தேவாலயம் கட்ட சிங்கம்பட்டி ஜமீன்தார் எதிர்த்தபோது கார் மிஷனரி அவர்கள் பேருதவி செய்தார். கார் மிஷனரி என அன்போடு அழைக்கப்படும் Rev. E. S. கார் (எட்மண்ட் ஸ்டைல்மன் கார்) ஐயரவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றவர். 1887 ல் CMS மிஷனரியாக கார் மிஷனரி வந்தவுடன் சார்ஜென்ற் பேராயருக்கு உதவியாகச் செயல்பட்டார் நற்போதக ஆசிரியராகப் பணி செய்தார். 1887 - 1915 வரை நெல்லைத் திருமண்டலத்தில் பணி செய்த அவர் 1915 இல் விருப்பஓய்வு பெற்று இங்கிலாந்து திரும்பினார். CMS Superintending Missionary ஆக திருநெல்வேலி திருமண்டலமெங்கும் பணிசெய்த அவர் கனம். ரேனியஸ் ஐயரவர்களுக்குப்பின் தென்மேற்கு நெல்லை, மேல் நெல்லை பகுதிகளில் சிறப்பாக ஊழியம் செய்தவர் ஆவார்.

### சுவிசேஷமுத்துவின் குடும்பத்தார் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட காரணங்கள்

1. 1873 முதல் 1903 வரை என 30 ஆண்டுகள் கல்லிடைக்குறிச்சியில் சபை ஊழியராக பணிசெய்தவரும் கல்லிடைக்குறிச்சியில் திருமணம் செய்தவருமான அ. ஈசாக்கு உபதேசியார் தொடக்க காரணமாயிருந்தார். அவர் இடைவிடாது இக்குடும்பத்தாருக்கு நற்செய்தி அறிவித்து வந்தார்.
2. இக்குடும்ப தலைவரது மூத்த மகன் வெள்ளையாவுக்கு துவரைக்குளத்திலிருந்து வந்த கிறிஸ்தவ சம்பந்தம் மற்றொரு காரணமாயிருந்தது. பெரியவரின் மூத்த மகன் வெள்ளையாவுக்கு துவரைக்குளம் கிராமத்திலிருந்து பெண் சம்பந்தம் வந்தது. பெரியவர் தம் மூத்தமகள் மாடத்தியை துவரைக்குளத்திலேயே திருமணம் செய்து கொடுத்திருந்தார். இந்த மாடத்தி நல்ல உயரமுடையவராக இருந்ததால் குடும்பத்தாரால் நெட்டைமாடத்தி என்றழைக்கப்பட்டார். அவரது கணவரும் நல்ல உயரம் கொண்டவராக இருந்தார். சுவிசேஷமுத்து நாடாரின் மகன் வெள்ளையாவுக்கு பெண் தர முன்வந்த துவரைக்குளம் கிறிஸ்தவக் குடும்பத்தினர் வெள்ளையா கிறிஸ்தவராக வேண்டும் என்றனர். அப்பெண்ணின் பெயர் கிருபை என்பதைத் திருமண்டல பதிவேடுகள் மூலம் அறியமுடிகிறது. அக்கிராமத்தில் தம் மகள் மாடத்தியை சுவிசேஷமுத்து திருமணம் செய்து கொடுத்திருந்தபடியால் துவரைக்குளத்து கிறிஸ்தவக் குடும்பத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். நற்பண்புள்ள அந்த நல்ல குடும்பத்தோடு திருமண உறவை ஏற்படுத்திக்கொள்ள அவருக்கு விருப்பம் இருந்தது. இக்குடும்பத்தினர் 1890 - 1898 க்குட்பட்ட காலகட்டத்தில் கிறிஸ்தவரானார்கள்.

### கிறிஸ்தவரான போது சந்தித்த கஷ்டங்கள்

இக்குடும்பத்தினர் கிறிஸ்தவரானதால் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் இருந்து இக்குடும்பத்திற்கு எதிர்ப்பு வந்தது ஏனென்றால் அவரே இக்குடும்பத்தாரை தம் ஜமீன் எல்கைக்குட்பட்ட தெற்குபாப்பான்குளம் கிராமத்தில் குடியேற்றியவர். சுவிசேஷமுத்துவின் பிள்ளைகளில் ஐவர் மரணமடைந்தனர், ஆனாலும் பெரியவர் சுவிசேஷமுத்துவும் அவரது குடும்பத்தாரும் கிறிஸ்தவ விசுவாசத்தில் மனந்தளராமல் பின்வாங்காமல் உறுதியாக நின்றனர்.

### தெற்கு பாப்பாங்குளத்தில் முதல் ஞானஸ்நானம்

கல்லிடைக்குறிச்சி ஈசாக்கு உபதேசியார் மூலம் ஏற்கனவே கிறிஸ்தவத்தை அறிந்து கிறிஸ்தவத்தின்பால் ஆர்வம் கொண்டிருந்த குடும்ப பெரியவர் இக்காரியத்தை திரு. அ. ஈசாக்கு உபதேசியாரிடம் கூற அவர் பெரியவரது குடும்பத்தாரை ஞானஸ்நானத்திற்கு நேராக ஆயத்தம் செய்தார். குடும்பத்தாரனைவரும் அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் மூலம் கல்லிடைக்குறிச்சியில் ஞானஸ்நானம் பெற்றனர். குடும்ப பெரியவர் சுவிசேஷமுத்து எனவும் மூத்த மகன் வெள்ளையா மாசில்லாமணி எனவும் கடைசிமகன் முத்துக்கண் எனவும் ஞானஸ்நானம் பெற்றனர்.

### சுவிசேஷமுத்துவின் மகள் குடும்பம் தெற்கு பாப்பான்குளம் வந்த வரலாறு

தெற்கு பாப்பான்குளம் மாசில்லாமணி (வெள்ளையாநாடார்) துவரைக்குளத்தைச் சேர்ந்த கிருபையைத் திருமணம் செய்த பின்பு தனது அக்கா மாடத்தி வசித்து வந்த ஊரும் தமது மாமனார் ஊருமான துவரைக்குளத்திற்கு வருகை தந்த போது துவரைக்குளத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருந்தது. இனி இவ்வூரில் வசிக்கவேண்டாம் என முடிவெடுத்து தங்களது வீட்டைக் காலி செய்தவாறு அக்கால மலையாள நாடான திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு (தற்போதைய குமரிமாவட்டத்துக்கு) செல்வதற்கு அனைவரும் தயாராக இருந்தனர். தனது அக்கா குடும்பத்தாரின் இந்த முயற்சியை நேரில் கண்ட மாசில்லாமணி (வெள்ளையாநாடார்) அக்கா குடும்பத்தார் அனைவரையும் தெற்குபாப்பான்குளம் கிராமத்துக்கு வந்து தங்களோடு குடியிருக்கும்படி அழைப்பு விடுத்ததோடு மட்டுமல்லாது உடனடியாக அதைச் செயல்படுத்தினார். அந்நேரம் மாடத்தி அம்மாளுக்கு அநேக சிறுபிள்ளைகள்.

1. சாமிக்கண்
2. நாராயணன்
3. லெட்சுமணன்
4. வைகுண்டராமன் உட்பட இருந்தனர்.

சிறுபிள்ளைகளால் துவரைக்குளத்திலிருந்து தெற்குபாப்பான்குளம் வரை நடக்க இயலாது என்பதால் அவர்களனைவரையும் தலையில் சுமந்து கொண்டு செல்ல பனையோலைப் பெட்டிகள் உடனடியாகத் தயார் செய்யப்பட்டன. அக்கா மாடத்தி - அத்தான் வேதமுத்து மற்றும் பிள்ளைகள் என அனைவரோடு மேல்திசையில் இருந்த தெற்கு பாப்பான்குளம் நோக்கி புறப்பட்டனர். தெற்குபாப்பான்குளம் வந்த அவர்களனைவரையும் அன்போடு வரவேற்ற மாடத்தியின் தந்தை சுவிசேஷமுத்து தாம் வசித்த அதே தெருவில் வீட்டின் கீழ்புறம் அவர்களனைவரும் தங்கியிருக்க இடம் அளித்தார்.

தெற்குபாப்பான்குளம் வந்த மாடத்தியும் அவரது கணவரும் பிள்ளைகளும் கிறிஸ்தவதத்தை ஏற்றனர். இரு போக நெல் விளையும் பூமியாகவும் பனையேற்றுத்தொழிலுக்கு ஏற்றவாறு அடர்த்தியான பனைமரங்களைக் கொண்டதாகவும் இருந்த தெற்குபாப்பான்குளம் கிராம் அவர்களுக்கு மிக வசதியாயிருந்தது.

இந்நிலையில் துவரைக்குளத்தில் மீண்டும் பஞ்சம் பெரிதான போது வெள்ளையநாடார் என்ற மாசில்லாமணியின் மனைவி கிருபையின் தங்கை குடும்பத்தினர் வெள்ளையநாடார் என்ற மாசில்லாமணி குடும்பத்தாரின் அழைப்பின் பேரில் தெற்கு பாப்பாங்குளத்தில் குடியேறினர். வெள்ளையநாடார் குடும்பத்தினர் குடியிருந்த நாடார் தெருவில் இக்குடும்பத்தினர் வடபகுதியில் குடியேறினர். பெருமாள்குளத்து குடும்பத்தினரும் இங்கு குடியேறினர்.

### தெற்குபாப்பான்குளம் சபையின் முதல் கிறிஸ்தவரது வரலாறு

சுவிசேஷமுத்துநாடார் கிறிஸ்தவரானபோது ஏற்பட்ட துன்பங்களில் அவரது ஐந்து ஆண்பிள்ளைகளின் மரணம் அதனால் அவரது பிற சமய உறவினர்கள் மற்றும் பிற சமூகத்தார் அவரது குடும்பத்தைப் பற்றி 'எடுபட்டுப்போன குடும்பம்' என பரியாசம் செய்தார்கள். ஆனாலும் கிறிஸ்தவப் பற்றுறுதியில் அக்குடும்பத்தார் உறுதியோடிருந்தார்கள். 1911 - 12 நல்லூர் சர்க்கிள் சங்க இனவழியில் கா. சுவிசேஷமுத்து என்ற பெயரில் சங்கம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்பின் அவரது பெயர் 1912 - 1913 நல்லூர் சர்க்கிள் சங்க இனவழியில் இல்லை ஆதலால் அவர் 1912 ல் மரணமடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவரது மரணத்துக்குப்பின்பு அவரது மருமகன் வேதமுத்துநாடார் மற்றும் மகன் மாசில்லாமணி (வெள்ளையாநாடார்) ஆகியோர் குடும்பத்திற்கு தலைமையேற்றனர். இவர்களுக்கு கடைசி தம்பியான முத்துக்கண்நாடார் உறுதுணையாயிருந்தார்.

சுவிசேஷமுத்துவின் மகள் நெட்டை மாடத்தியின் ஞானஸ்நானப் பெயரை அறிய இயலவில்லை மற்றும் நெட்டை மாடத்தியின் கணவரது இந்து பெயரை அறிய இயலவில்லை அவரது ஞானஸ்நானப் பெயர் வேதமுத்து என்பதை திருமண்டலப் பதிவேடுகள் மூலம் அறியமுடிகிறது. இவர் நல்ல உயரமும் உடல்கட்டமைப்பும் கொண்டவராக இருந்துள்ளார். அவர் தெற்குபாப்பான்குளம் கிராமத்தையொட்டி முக்கூர் சாமியார் தோட்டத்திலிருந்த யாரும் தூக்க இயலாத பெருங்கல் ஒன்றை சாதாரணமாகத் தூக்கிப் போட்டதாகவும் அந்த அளவு பலசாலியாக இருந்ததாக அவரது கொள்ளுப் பேத்தி சபை வரலாறு குறித்த நேரடிப் பேட்டியில் குறிப்பிடுகிறார்கள். மேலும் கார் மிஷனரி அவர்கள் சிங்கம்பட்டி ஜமீன்தாரை சந்திக்கச் சென்றபோது தமது தாத்தாவின் தந்தையான வேதமுத்துவும் (மாடத்தியின் கணவர்) கார் மிஷனரியுடன் சென்றதாகவும் அவர் குறிப்பிடுகிறார். முத்துக்கள் நாடார் குமரிமாவட்டத்தைச் சேர்ந்த மாடக்கண் நாடாரின் மகள் மரியம்மையைத் திருமணம் செய்தார் இத்திருமணம் கல்லிடைக்குறிச்சி CMS தேவாலயத்தில் நடைபெற்றது.

### ஆண்டவரின் பேரருளால் சுவிசேஷமுத்துநாடாரின் பிள்ளைகளில் நிலைத்தவர்களான

#### மூத்த மகள்

I. மாடத்தி - வேதமுத்து வழிமரபில் மகள் வழி பேரப்பிள்ளைகள்

1. வே. சாமிக்கண் - ஞானவடிவம்மாள், 2. வே. ஆசீர்வாதம் நாராயணன் - பாக்கியம் அம்மாள், 3. வே. யாக்கோபு லெட்சுமணன் - ஞானம்மாள் , 4. வே. லெட்சுமி, (யாக்கோபு லட்சுமணனனும் லட்சுமியும் இரட்டையர், 5. வே. தானியேல் வைகுண்டராமன் - அன்னபாக்கியம் என்பவர்கள்.

#### மூத்த மகன்

II. மாசில்லாமணி (வெள்ளையா) - கிருபை வழிமரபில் மூத்த மகன் வழி பேரப்பிள்ளைகள்

1. மா. காலேப், 2. மா. சாமுவேல், 3. மா. திரவியம் - ரெபேக்காள், 4. மா. முத்தம்மாள், 5. மா. வேதமணி,

#### கடைசி மகன்

III. முத்துக்கண் - மரியம்மை வழிமரபில் கடைசி மகன் வழி பேரப்பிள்ளைகள்

1. மு. முத்தையா, 2 மு. உலகம்மாள், 3. மு. ஆசீர்வாதம், 4. மு. தர்மக்கண் நிலைத்த மேற்கண்ட மூன்று குடும்பங்களையும் அபரிதமாக ஆண்டவர் ஆசீர்வதித்தார்.

### தேவாலயப் பிரதிஷ்டை

தெற்கு பாப்பான்குளத்தில் கல்கட்டிடத்தில் ஒடு வேயப்பட்ட மேற்கூரையுடன் கூடிய தேவாலயம் கட்டுவதற்கு முத்துக்கண் நாடாரிடம் இருந்து வாங்கப்பட்ட நிலத்தில் 02.02.1911 இல் கார் மிஷனரி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு அஸ்திபார பணிகள் நடைபெற்ற நிலையில் சிங்கம்பட்டி ஜமீன்தாரால் கட்டுமான பணி தடைசெய்யப்பட்டது. இந்த தகவல் உடனடியாக கார் மிஷனரிக்கு தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த கார் மிஷனரி உடனடியாக தெற்கு பாப்பான்குளத்திற்கு வருகை தந்தார்கள். தெற்குபாப்பான்குளம் வந்து தேவாலய கட்டுமான பணி தடை செய்யப்பட்டதை கண்ட கார் மிஷனரி உடனடியாக சிங்கம்பட்டி ஜமீன்தாரை சந்திக்க தெற்கு பாப்பான்குளம் சபையார் வழிகாட்டி செல்ல ஜமீன் சிங்கம்பட்டிக்கு நடந்தே சென்றார்கள். அக்காலத்தில் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர் மற்றும் CMS மிஷனின் தலைமை மிஷனரி ஆகவும் பெரிய பொறுப்பில் இருந்த வெள்ளைக்காரர் ஒருவர் தம்மை சந்திக்க தமது அரண்மனைக்கு நடந்து வந்ததைக் கண்ட ஜமீன்தார் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார். அன்போடு வரவேற்றார் அவரிடம் தெற்கு பாப்பான்குளம் தேவாலயக் கட்டுமானப்பணி அவரால் தடைசெய்யப்பட்டிருப்பது குறித்தும் தேவாலயம் கட்ட அனுமதிக்க வேண்டியும் கார் மிஷனரி அவர்கள் கோரிக்கை விடுத்தார். கார் மிஷனரி அவர்களது கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொண்ட ஜமீன்தார் அப்பணியை இனி தாம் தடை செய்வதில்லை என உறுதி அளித்தார். உடனடியாக ஜமீன்தார் அவர்களுக்கு நன்றி செலுத்தி விட்டு கார் மிஷனரி அவர்கள் நடந்தே தெற்கு பாப்பான்குளம் வருகை தந்தார்.

கார் மிஷனரி அவர்கள் தெற்கு பாப்பான்குளம் வருகை தரவும் அதே நேரத்தில் ஜமீன்தார் அவர்கள் மூலம் ஒரு வண்டி

நிறைய கொல்லம் ஓடுகளும் ஓடு வேய்வதற்கான மரக்கம்புகளும் ஜமீன்தாரால் அன்பளிப்பாக அனுப்பப்பட்டிருப்பதைக் கண்ட கார் மிஷனரி மகிழ்ச்சி அடைந்தார். ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார். அதன்பின் ஒரு மாதத்திற்குள் கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவடைந்தது இந்த புதிய தேவாலயம் கார் மிஷனரி அவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகா கனம் A. A. வில்லியம்ஸ் அவர்களால் 30.03.1911 அன்று தூய. பவுல் தேவாலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தெற்கு பாப்பாங்குளத்தில் பணி செய்த சபை ஊழியர்கள்

தெற்கு பாப்பான்குளத்தின் முதல் உபதேசியாராக அங்கு ஆராதனைக் குழுவாக ஜெபம் நடத்தப்பட்ட காலத்திலிருந்து 1903 வரை இருந்தவர் கல்லிடைக்குறிச்சியில் 30 ஆண்டு (1873-1903) சபை ஊழியர் ஆகப் பணி செய்த திரு. அ. ஈசாக்கு உபதேசியார் ஆவார். இவருக்குப் பின்னர் கல்லிடைக்குறிச்சியில் சபை ஊழியர் ஆக இருந்த உபதேசிமார்களே தெற்குப் பாப்பான்குளம் சபையிலும் உபதேசியாராக இருந்து கண்காணித்து வந்தனர். 1911 இல் புதிய தேவாலயம் கட்டப்பட்ட பின்பு தெற்கு பாப்பான் குளத்தில் சி. எம். எஸ். தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டது. அதில் பணி செய்த தலைமை ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியர்கள் பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டிருந்த மிஷன் வீடு எனும் சபை ஊழியர் வீட்டில் தங்கி இருந்து தெற்கு பாப்பாங்குளம் சபையில் சபை ஊழியர் ஆக இருந்து தெற்கு பாப்பாங்குளத்தில் சபை ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

1939 காலகட்டங்களில் சபை ஊழியர் மற்றும் ஆசிரியராக இவ்வூருக்கு குடும்பமாக வந்த திரு. நவமணி உபதேசியார் அவர்கள் தெற்கு பாப்பாங்குளம் தேவாலயத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டினார்கள். நீண்ட பல ஆண்டுகள் குடும்பமாக இங்கு பணி செய்தார்கள். இவர்கள் திருமதி. மேரி ஸ்டெல்லா ஆசிரியை அவர்களின் தகப்பனார் ஆவார். இவர்களுக்குப் பின்னர் 1947 வரை பல ஆண்டுகள் கல்லிடைக்குறிச்சியைச் சொந்த ஊராகக் கொண்ட திரு. காலேப் யோசுவா உபதேசியார் இங்கு சபை ஊழியராக குடும்பமாக மிஷன் வீட்டில் தங்கி பணிசெய்தார்கள். மேட்டூரைச் சொந்த ஊராகக் கொண்ட திரு. J. சாமுவேல் தேவராஜ் ஆசிரியர் 1957 முதல் 1964 வரை இங்கு சபை ஊழியராக குடும்பமாக மிஷன் வீட்டில் தங்கி பணிசெய்தார்கள். இவர்களுக்குப் பின்னர் சபை ஊழியர் ஆக இவர்களுடைய உடன்பிறந்த தம்பி திரு. J. தாமஸ் சுந்தர்ராஜ் ஆசிரியர் 1964 முதல் பல ஆண்டுகள் குடும்பமாக மிஷன் வீட்டில் தங்கி இங்கு பணிசெய்தார்கள். நவமணி உபதேசியார் அவர்களின் மகளான திருமதி. மேரி ஸ்டெல்லா ஆசிரியை அவர்களின் கணவர் திரு. R. பழனிச்சாமி என்ற மோகன்தாஸ் அவர்கள் இங்கு பல ஆண்டுகள் இருமுறை சபை ஊழியராக குடும்பமாக மிஷன் வீட்டில் தங்கி பணியாற்றி உள்ளார்கள். தெற்கு பாப்பாங்குளம் திருச்சபையில் சபை ஊழியராக திரு. எபநேசர் ஆசிரியர் - திருமதி தேவபிச்சம்மாள் H. M. தம்பதியர் இருமுறை நீண்ட பல ஆண்டுகள் குடும்பமாக மிஷன் வீட்டில் தங்கி இங்கு பணி செய்தனர். தெற்கு பாப்பாங்குளம் திருச்சபையில் 1985-1987 இல் திரு. ஜான்ஜேக்கப் H. M. சபைஊழியராகப் பணி செய்தார்கள். தெற்கு பாப்பாங்குளம் TDTA தொடக்கப்பள்ளியில் திரு. ஜான்ஜேக்கப் H. M. 1987 முதல் 1999 வரை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்கள். 1987 முதல் 1993 வரை திரு. எபநேசர் அவர்கள், 1993 முதல் 1996 வரை 3 ஆண்டுகள் திரு. P. சீனிப்பாண்டியன் அவர்கள், அதன்பின் 1996 முதல் 2000 மே வரை 4 ஆண்டுகள் திரு. ஜான் பரமேஷ் அவர்கள், 2000 மே முதல் 2000 நவம்பர் வரை ஆறு மாதங்கள் திரு. C. வில்சன் அவர்கள் ஆகியோர் தெற்கு பாப்பாங்குளத்தில் சபை ஊழியராகப் பணி செய்தார்கள்.

### புதிய தேவாலய மற்றும் நூற்றாண்டு நினைவு Rev. E. S. Carr Memorial Hall பிரதிஷ்டை

வளர்ந்து வந்த தெற்கு பாப்பாங்குளம் திருச்சபையாருக்கு தேவாலயம் போதுமானதாக இல்லாதததால் பழைய தேவாலயம் முழுமையாக அகற்றப்பட்டு அதே இடத்தில் பெரிதான அளவில் புதிய தேவாலயம் கட்ட கனம். அதிசயராஜ் ஐசக் அவர்களால் 22.02.2006 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. 20.04.2008 இல் கல்லிடைக்குறிச்சி சேகர குரு. கனம். S. ஆபிரகாம் செல்வராஜ் ஐயரவர்கள் முன்னிலையில் பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்களால் புதிய தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தெற்கு பாப்பாங்குளம் தேவாலய நூற்றாண்டு விழா (1911-2011) நினைவாக தெற்கு பாப்பாங்குளம் சபை மற்றும் தேவாலயம் கட்ட அரும்பாடுபட்ட கார் மிஷனரி அவர்களை நினைவு கூரும் வகையில் Rev. E. S. Carr Memorial Hall என்ற பெயரில் தேவாலய வளாகத்தில் ஊழியர் தங்கும் அறை கட்ட 07.05.2009 அன்று கல்லிடைக்குறிச்சி சேகர குரு கனம். S. ஆபிரகாம் செல்வராஜ் ஐயரவரகளால் அடிக்கல் நாட்டப்பட்டது. 20.04.2011 இல் கனம். கார் மிஷனரி நினைவு கட்டிடம் பேராயர் மகாகனம். J. J. கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தேவாலய முன்புற விரிவாக்கம், கோபுரம் மற்றும் பள்ளியின் தென் புறக் கட்டிடம் பிரதிஷ்டை

தேவாலயத்தின் விரிவாக்கம் மற்றும் புதிய கோபுரத்திற்கான அடிக்கல் 12. 02. 2023 அன்று கல்லிடைக்குறிச்சி சேகர தலைவர் அருள்திரு. P. முத்துராஜ் ஐயரவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. 21. 04. 2024 அன்று நெல்லை பேராயர் மகாகனம். ARGST. பர்னபாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. TDTA தொடக்கப்பள்ளி தென்புறக் கட்டிடத்திற்கான அடிக்கல் அருள்திரு. ஜான் கிப்சன் பால்ராஜ் ஐயரவர்களால் 21. 02. 2022 அன்று நாட்டப்பட்டது. அதன் திறப்பு விழா 21. 04. 2024 அன்று நெல்லை பேராயர் மகாகனம். ARGST. பர்னபாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தற்போதைய தெற்கு பாப்பான்குளம் தூய. பவுல் தேவாலயத் திருச்சபையில் தற்போது 30 குடும்பத்தினர் உள்ளனர். 2000 நவம்பர் முதல் இன்றுவரை சபை ஊழியராக திரு. P.S. சூரியக்குமார் சிறப்பாக பணி செய்து வருகிறார். கல்லிடைக்குறிச்சி சேகர தலைவராக அருள்திரு. P. முத்துராஜ் ஐயரவர்கள் 2022 ஜூன் முதல் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

# வாழ்த்துச்செய்தி



**திரு. C. ஆல்வின் ஜேக்கப்**

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்தை சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கின்ற மிஷனெரிகள் அர்ப்பணிப்பை உணராமல், கிறிஸ்தவத்தின் மாண்பை, மகத்துவத்தை அறியாமல் வேகமாய் போய்க் கொண்டிருக்கின்ற இக்காலக் கட்டத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகளின் அர்த்தமுள்ள, அர்பணிப்பின் வாழ்க்கையை, நம்முடைய திருச்சபைகளின் வரலாறுகளை திருச்சபையின் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற சிரிய சிந்தனையோடும் வெளி வந்து கொண்டிருக்கின்ற கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழ் 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5 ம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கின்றது என்பதை நினைத்து கர்த்தரை துதிக்கின்றேன். இந்த நான்கு ஆண்டுகளில் திருச்சபையின் மக்களுக்கு கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழ் தந்திருக்கின்ற விலைமதிப்பற்ற தகவல்கள் ஏராளம். ஏராளம்.

இனி வருகின்ற ஒவ்வொரு ஆண்டும் புதிய, புதிய தகவல்களை இந்த இதழ் நமக்குத் தந்திட வாழ்த்துகின்றேன். இனி வரும் தலைமுறை, கிறிஸ்தவத்தின் மாண்பை போற்றி வாழ்த்திட, மிஷனெரிகளின் தன்னலமற்ற தியாகத்தை நாமும், நம்முடைய சந்ததிகளும் போற்றிடவும் வரலாற்றை மிகச்சரியாகத் தெரிந்துகொள்ளுவோம். வரும் சந்ததியினருக்கு சரியாய் சொல்லிக் கொடுப்போம்.

திசை தெரியாமல் திகைக்காத்திருக்க திருச்சபையின் வரலாற்றை தெரிந்திருக்க வேண்டும் என்ற கம்பிர தொனியுடன் வந்து கொண்டிருக்கின்ற ‘கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்’ மாத இதழை ஆவலோடு படிக்கின்ற ஒரு வாசகனாய் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துகின்றேன்.












**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் நூலக ஆவண காப்பகம் மற்றும் அருங்காட்சியகம் கட்டும் பணி மிக துரிதமாக நடைபெற்று வருகிறது. பணிகளுக்காகவும் தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.



christianhistoricalsociety.in/
tchsportal.co.in





# Yearly Subscription

**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history


Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**


Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401